Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 17 ஹிஜ்ரி 1427 ற.ஆகிர் 01 (30.04.2006) ஞாயிற்றுக்கிழமை இதழ் 212




# அப்பட்டமான போர்நிறுத்த மீறல்

## திருமலை தாக்குதல் குறித்து கண்காணிப்புக்குழு அறிக்கை

கொழும்பு

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள்ள மூதூர் மற்றும் சம்பூர் பிரதேசங்களில் அரச படைகள் மேற்கொண்ட தாக்குதல் அப்பட்டமான போர்நிறுத்த மீறல் என்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான பிரதேசங்களை கண்காணிப்புக் குழுவின் தலைவர் பிரிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் பார்வையிட்ட பின்னர் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது -

வடக்கு - கிழக்கில் நிலை கொண்டுள்ள படையினர் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டு வருகின்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் சார்ஜன்ட் சுட்டுக் கொலை!

வவுனியா

வவுனியாவில் நேற்றிரவு மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுத பாணி கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந் தார் நேற்றிரவு 8 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா ரயில் நிலையத்துக்கு அருகில் சனநடமாட்டத்துக்கு முன்பாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகவும், ஆயுதபாணிகள் தப்பிச் சென்று விட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மணலாற்றில் கிளைமோர் தாக்குதல்

மணலாறு

மணலாறு காட்டுப் பிரதேசத்தில் இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியினரால் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் போருதவிப் படைவீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் நடத்தப்பட்ட தாக்குதல் நெடுங்கேணியில் சிலோன் தியேட்டருக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## துணை ஆயுதக் குழுக்கள் குறித்த அரசின் நடைமுறைகள் ஆபத்தானவை

### ஐ.நா அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு

அரசாங்கம் துணை ஆயுதக் குழுக்கள் தொடர்பாக கடைப்பிடித்து வரும் நடைமுறைகள் மிகவும் ஆபத்தானவை என்று ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சாட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மேலதிக சட்டத்துறை தகவல் அதிகாரி பிலிப் அல்ஸ்டன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

கருணா குழு உட்பட துணை ஆயுதக் குழுக்கள் தொடர்பாக அரசாங்கம் காண்பித்து வரும் வித்தியாசமான அணுகுமுறை மிகவும் அபாயகரமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் மீதான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், பொதுமக்களின் பாதுகாப்பை ... நிலை காணப்படுவதாகவும், இதனை மாற்றியமைக்கும் வகையில் கண்கா (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைத் தடைசெய்யும் விவகாரம்; ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுள் பிளவு!

கொழும்பு

விடுதலைப் புலிகளை தடைசெய்வது குறித்த விவகாரத்தில் ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கிடையில் கருத்து முரண்பாடு நிலவுவதால் இது தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகள் தோல்விகாணும் நிலையில் இருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளை ஐரோப்பிய யூனியன் தடைசெய்யவேண்டுமென இலங்கை அரசாங்கம் வலியுறுத்தி வருகிறது. இது தொடர்பாக ஐரோப்பிய யூனியன் குறுகிய காலத்தில் முடிவு ஒன்றை எடுக்கும் என்றும் இலங்கை அரசு நம்பிக்கை வெளியிட்டிருக்கிறது.

ஆனால், இந்த விவகாரம் குறித்து ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்குள் கருத்து முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது.

. ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் 25 நாடுகளில் பிரிட்டன் மட்டுமே இப்போது புலிகளைத் தடை செய்திருக்கிறது.

இந்தத் தடையைப் பயன்படுத்தி ஐரோப்பிய யூனியனில் புலிகள் மீது ...

## படையினரின் தாக்குதலை கண்டித்து புதனன்று சென்னையில் ஆர்ப்பாட்டம்

சென்னை

இலங்கையில் முப்படைகளை ஏவி அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கும் சிங்கள இன வெறி அரசைக் கண்டித்து தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் சென்னையில் எதிர்வரும் புதன் கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

... கொளத்தூர் தா.செ.மணி, தமிழ் தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு, தமிழ் தேசிய பொதுவுடமைக் கட்சியின் பொதுச்செயலாளர் பெ.மணியரசன் உட்பட பல்வேறு தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இலங்கைத் தமிழர்கள் மீதான சிங்கள முப்படைகளின் தாக்குதல் களைக் கண்டித்து சென்னையிலுள்ள ...

அனுகுமுறை மிகவும் அபாயகரமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் மீதான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இரு தரப்பும் உறுதியளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்த மீறல்கள் குறித்த விசாரணைகளை உரிய முறையில் முன்னெடுக்க முடியாத

சென்னை —

இலங்கையில் முப்படைகளை ஏவி அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கும் சிங்கள இன வெறி அரசைக் கண்டித்து தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் சென்னையில் எதிர்வரும் புதன் கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

சென்னையில் உலகத் தமிழர் பேரமைப்பு அலுவலகத்தில் நேற்று இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத் தூர் தா.செ.மணி, தமிழ் தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு, தமிழ் தேசிய பொதுவுடமைக் கட்சியின் பொதுச்செயலாளர் பெ.மணியரசன் உள்ளிட்ட பல்வேறு தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இலங்கைத் தமிழர்கள் மீதான சிங்கள முப்படைகளின் தாக்குதல் களைக் கண்டித்து சென்னையிலுள்ள இலங்கை தூதரகம் முன்பாக எதிர்வரும் புதன்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. முன்னதாக சென்னை - நுங்கம் பாக்கம் வள்ளுவர் கோட்டத்திலிருந்து ஊர்வலம் தொடங்கி இலங்கை தூதரகத்தை சென்றடையும்.

. ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் 25 நாடுகளில் பிரிட்டன் மட்டுமே இப்போது புலிகளைத் தடை செய்திருக்கிறது.

இந்தத் தடையைப் பயன்படுத்தி ஐரோப்பிய யூனியனில் புலிகள் மீது தடைவிதிக்க முடியுமென இலங்கை அரசு கருதியிருந்தது. ஆனால், புலிகள் மீதான தடையை ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் நோட்டிக் நாடுகள் விரும்பவில்லை என ராஜதந்திர (12 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க நலனுக்கெதிராக புலிகள் செயற்படவில்லை!

## இராஜாங்க திணைக்களம் அறிவிப்பு

வொஷிங்டன் —

அமெரிக்காவின் நலன்களைப் பாதிக்கக் கூடிய வகையில் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொள்ளவில்லை என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத அமைப்புகளின் செயற்பாடுகள் குறித்த அறிக்கையிலேயே அமெரிக்கா இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடித்திருக்கும் அமெரிக்கா, புலிகள் தொடர்பாக மேலும் குறிப்பிட்டுள்ளதாவது -

அமெரிக்க மக்களையோ, அமெரிக்க சொத்துகளையோ இலக்கு வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தவில்லை .

கடந்த நவம்பர் மாதம் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக அமெரிக்காவால் வழங்கப்பட்ட வாகனம் ஒன்று விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியது. எனினும், தாக்குதல் நடந்த சமயம் அந்த வாகனத்தில் இலங்கை இராணுவத்தினர் பயணம் செய்தனர்.

பயங்கரவாத செயல்களுக்கு நிதி வழங்குவதை இனம்காண்பதற்கு அமெரிக்காவுக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்கிய போதும், இலங்கைக்கு வெளியே புலிகள் பயங்கரவாத செயல்களில் ஈடுபடும் எந்த சான்றுகளும் கிடைக்கவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கான நிதி உதவிகள் உள்ளூர் வரி மூலமாகவும், வட அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்ரேலியா ஆகிய கண்டங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கிளைமோரில் காயமுற்ற இளைஞர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் —

மன்னார் - மடு வீதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் காயமடைந்த இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.45 மணியளவில் நடைபெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த ஜி.ஜீவானந்தன் (வயது 24) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்த வேளையில் நடைபெற்ற இந்தத் தாக்குதலில் இருவர் காயமடைந்தனர். காயடைந்தவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

APC ஆனந்தா பிறைவேற் கிளினிக்
எமது சேவைகள் 1. ஓ.பி.டி [O.P.D] 2. ஆய்வுகூடம் 4. கிளினிக் 5. பார்மசி 5. உடற்பயிற்சி [நோயாளிகளுக்கு]
173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 8144
(C/4385)
ஆலோசனை நேரம்:
(திங்கள் முதல் சனி) காலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 முதல் காலை 10.00 வரை
மாலை 5.00 முதல் இரவு 9.00 வரை


# மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை தொடங்குவதில் தாமதம்

உடுவில்

பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கான உணவு செயல்திட்டத்துக்கு பாத்திரங்களும், உலர் உணவும் வந்து சேராமையால் இந்தத் திட்டம் உடனடியாக ஆரம்பிக்கமுடியாது உள்ளதாக தெரியவருகிறது.

தரம் ஒன்று தொடக்கம் ஒன்பது வரையான மாணவர்களுக்கு உணவு வழங்கவென அரசால் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கமைவாக சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், கோப்பாய், வேலணை, கரவெட்டி ஆகிய கல்விக் கோட்டங்களுக்குட்பட்ட பாடசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்ட போதும், அசாதாரண சூழ்நிலை காரணமாக திருகோணமலையிலிருந்து இந்தத்திட்டத்துக்கான பாத்திரங்களும், உலர் உணவுகளும் எடுத்து வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதனால் பெரும்பாலும் அடுத்த தவணை ஆரம்பத்திலிருந்து இந்தத் திட்டம் முறைப்படுத்தப்படுமென தெரிவிக்கப் படுகிறது.

தரம் 1,2 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கு உணவு வழங்கும் நடைமுறை தொடர்ந்து முன்னெடுக்கப்படுமெனவும் -

அதேவேளை, தரம் 5 வரையுள்ள பாடசாலைகளில் 100 மாணவர்களுக்கு உட்பட்டிருப்பினும் இந்தத் திட் டத்தின்படி உணவு வழங்கலாம் என கல்விஅதிகாரிகளால் தெரிவிக்கப் பட்டுள்ளது (101)




யாழ். நகரப் பகுதியில் எரிபொருளைப் பெறுவதற்காகக் காத்திருக்கும் வாகனங்களில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம்.

# நேர்ப் வீடமைப்பு திட்டத்தில் முறைகேடு என முறைப்பாடு

நெடுந்தீவு

நெடுந்தீவுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நேர்ப் வீடமைக்கும் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்கள் முறைகோடான முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பெருமளவு மக்கள் ஒன்றுகூடி நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் முறையிட்டுள்ளனர்.

இவ்வாறு ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் குடும்ப நிலைகள் தொடர்பாகவும், அவர்களுக்கு இந்த உதவி வழங்குவதால் பெரும் சிக்கல்கள் ஏற்படும் என பெருமளவு மக்கள் எழுத்துமூலமான முறைப்பாடுகள் செய்துள்ளனர்.

இதன் காரணமாக ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட ஆலமைவணம், கோடைக்காடு ஆகிய கிராமங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களில் மாற்றம் ஏற்படலாம் என மக்கள் தெரிவித்தனர். (113)

# கும்பாபிஷேகம்

மீசாலை

மீசாலை மேற்கு கரும்பி மாவடி கந்தசாமி ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

மறுநாள் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும். மறு நாள் புதன்கிழமை காலை 5.00 மணி முதல் கிரியைகள் நடைபெறும், அதனை தொடர்ந்து விசேட பூசைகளும் நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (25)

❖ ❖ ❖

சாவகச்சேரி சப்சிரிமாவடி அருள்மிகு ஸ்ரீ சக்கர ஆழ்வார் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 3ம் திகதி நடைபெறவுள்ளது.

புதன்கிழமை நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேக நிகழ்வு அன்றைய தினம் காலை 6.45 மணிமுதல் 8.40 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளதாகவும் கும்பாபிஷேக பணிக் குழுவினர் தெரிவித்தனர். (25)

# ஊரெழுவில் இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டார்

யாழ்ப்பாணம்

ஊரெழு பகுதியில் அடையாளம் காணப்படாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞரின் சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 7.20 மணியளவில் நடைபெற்ற சூட்டுச் சம்பவத்தில் மரிய பொன்னாடோ சுதாகரன்(வயது 24) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் மரணவிசாரணைகளை மேற்கொண்டார். சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு அவர் உத்தரவிட்டார். கோப்பாய் பொலிஸாரால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலம், பிரேத பரிசோதனையின் பின்னர் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# அதிபர்களை தரமுயர்த்த விண்ணப்பம் கோரல்!

உடுவில்

மத்திய கல்வி அமைச்சு - சேவையிலுள்ள அதிபர்களை தரமுயர்த்துவதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அதிபர் சேவையில் 5 வருடங்களை பூர்த்தி செய்த அதிபர் தரம் 2-IIயைச் சேர்ந்தவர்கள் அதிபர் தரம் 2 -Iக்கு பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று உரிய முறையில் பூர்த்தி செய்து ஒன்றை வலயக் கல்விப் பணிமனையிலும் -

மற்றையதை இசுறுபாயாவில் அமைந்துள்ள கல்வி அமைச்சுக்கும் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (101)

# பட்டதாரி ஆசிரியர்களுக்கான திசை முகாமைத்துவப்படுத்தும் திட்டம்

உடுவில்

புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான திசை முகப்படுத்தப்படும் 3 மாத சேவைக்காலப் பயிற்சி கல்வி அமைச்சால் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஊடாக சனி, ஞாயிறுமற்றும் தவணை விடுமுறை நாட்களில் யாழ்.பல்கலைக் கழகம், தேசிய கல்வியல் கல்லூரி ஆகிய இடங்களில் நடத்த திட்டமிடப் பட்டுள்ளது.

இதில் பங்குபற்றும் ஆசிரியர்கள் இரு விண்ணப்பங்களை தயாரித்து அதில் ஒன்றை வலயக் கல்வி பணிமனையிலும் -

மற்றயதை பயிற்சி பெறும் கல்வி நிலையத்துக்கும் அனுப்ப சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலை பயிற்சி தேவைப்படும் ஆசிரியர்களுக்கு தெரியப்படுத்தி மே மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வலிகாமம் வலயக் கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (101)

# நெடுந்தீவு குடியிருப்பாளர்களின் விபரங்களை திரட்டும் படையினர்

நெடுந்தீவு

நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள குடியிருப்பாளர்களது விபரங்களை கடந்த சில நாட்களாக கடற்படையினரும், பொலிஸாரும் இணைந்து வீடுவீடாக சென்று திரட்டி வருகின்றனர்.

நெடுந்தீவில் உள்ள பகுதிகளை குழுக்களாக பிரித்து இந்தப் பதிவு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், இது தொடர்பாக குடும்பத்தலைவர்களிடம் ஒப்பமும் பெறப்பட்டு வருகிறது.

படையினரது இந்த நடவடிக்கையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அச்சமும் விசனமும் அடைந்துள்ளனர். (113)

# பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இணையத்தளம் மூலமாக கிடைக்கப்பெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களின் முடிவுகள் சில வருமாறு-

| | |
|---|---|
| தெ.தீபன் | - 7A, 2B, S |
| பா.பாலதரங்கன் | - 6A, 3B, C |
| மு.ரஞ்ஜீத் | - 6A, 2B, C, S |
| தி.முகுந்தன் | - 6A, 2B, 2C |
| பி.கஜிராந் | - 3A, 3B, 2C |
| ஆ.தினேஸ் | - 3A, B, 4C |
| ஏ.துஜீவன் | - 3A, 4B, 2C, S |
| கே.ரவீந்தர் | - 3A, 3B, 3C |
| ஜெ.நிருபன் | - 3A, 2B, 3C |

# ஏற்றப்பட்ட கொடி வீழ்ந்ததால் பக்தர்கள் மத்தியில் பரபரப்பு

யாழ்ப்பாணம்

யாழ். நாச்சிமார் கோவில் கொடியேற்றத்தின்போது ஏற்றப்பட்ட கொடி திடீரென வீழ்ந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. நேற்றுமுன்தினம் யாழ். நாச்சிமார் கோவில் உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. பக்தர்கள் புடைசூழ ஆலய குருவால் கொடியேற்றப்பட்டவேளை ஏற்றப்பட்ட கொடி திடீரென கீழே வீழ்ந்தது.

இதனால் பக்தர்கள் பரபரப்பு அடைந்தனர். எதிர்காலத்தில் ஏதும் அசம்பாவிதம் நிகழக்கூடுமோ எனவும் அவர்கள் அச்சமடைந்தனர். பின்பு மீளவும் கொடியேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நெடுந்தீவு பிரதேச செயலக குழுநிலை விளையாட்டுப் போட்டி

நெடுந்தீவு

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்கான 2006ஆம் ஆண்டுக்கான பிரதேச மட்ட குழுநிலைப் போட்டிகள் இன்று முதல் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 3 மணிக்கு ஆண், பெண் இரு பாலாருக்குமான கரப்பந்தாட்டப்போட்டியும், நாளை காலை 8.30 மணிக்கு ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப்போட்டியும் மாலை 2 மணிக்கு ஆண், பெண் இரு பாலாருக்குமான எல்லே போட்டியும் இடம்பெறவுள்ளது.

போட்டிகள் யாவும் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளதுடன் பங்குபற்றும் வீர வீராங்கனைகள் குறித்த நேரத்துக்குவந்து போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு பிரதேச விளையாட்டு அதிகாரி தெரிவித்தார். (113)

# போட்டோ பிரதி இயந்திரம்

உடுவில்

வலி.தெற்கு பிரதேச சமுர்த்தி மகாசங்கத்துக்கு சமுர்த்தி அதிகார சபையால் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான போட்டோ பிரதி இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

விரைவில் பக்ஸ் இயந்திரமும் வழங்கப் படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (101)

# வேலக்கை பிள்ளையார் ஆலய உற்வசம்

உடுவில்

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

7ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6மெணிக்கு மஞ்சத் திருவிழாவும், 11ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் நடைபெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூஜை இடம்பெற்று 10 மணிக்கு தேர் உற்சவமும், மாலை 3 மணிக்கு தீர்த்தம், கொடியிறக்கம் என்பன நடைபெறும்.

13ஆம் திகதி சனிக்கிழமை மாலை வள்ளி தேவ சேனா சமேத முருகப் பெருமானுக்கு திருக்கல்யாணம் இடம்பெறும். (101)

# தென்மராட்சியில் டெங்குப் பிரசாரம்

யாழ்ப்பாணம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் தேசிய டெங்கு விழிப்புணர்வு வாரத்தை ஒட்டி டெங்கு நோய் சம்பந்தமான விழிப்புணர்வு பிரசாரம் நடைபெற்று வருகிறது.

சுகாதாரத்திணைக்களத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட தேசிய டெங்கு விழிப்புணர்வு பிரசாரம் நடைபெற்று வருகின்றது.

சுகாதாரத்திணைக்களத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட தேசிய டெங்கு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேசத்தில் ஒலிபெருக்கிகள் மூலம் விழிப்புணர்வு பிரசாரம் நடைபெற்று வருகின்றது. சுகாதார திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படும் இந்தப் பிரசாரத்தில்- டெங்கு நோய் ஏற்படுவதை தடுக்கும் வழிமுறைகள், நோய், அறிகுறிகள், டெங்கு நோய் தொடர்பான ஏனைய விடயங்கள் ஒலிபெருக்கிகள் மூலம் பிரசாரப் படுத்தப்படுகின்றன.

டெங்கு நோய் தொடர்பான பிரசார நடவடிக்கைகள் தேசிய டெங்கு வாரத்தை ஒட்டி நடைபெற்று வருவதாக சுகாதார திணைக் கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (25)

DAIDO
CF 90C
4 Gear இன் சிறப்புகள்
எங்களிடம் தாராளமாக DAIDO, YAMATO, HONDA, YAMAHA, BAJAJ, SUZUKI மற்றும் எல்லா சீனா தயாரிப்புகளுக்குப் பொருந்தும் உதிரிப்பாகங்கள் வேண்டியளவு கிடைக்கும்
52900.00
Koyo ரேசர்கள்
DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO
ஏகமுகவர்
செரன்டிப் மோட்டர் என்டர்பிறைஸ் (பிரைவேட்) லிமிட்டட்
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.
தொலைபேசி : 011-2341560-1, 2435779,
பக்ஸ் 011-2454608
E.mail: zme@slt.lk

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த
மூன்றாவது வெற்றி வாரம்
திருப்பதி
காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

ராஜா யாழ்ப்பாணம்
புதுவருட வெளியீடு
பரத், மல்லிகா கபூர் மற்றும் பலர் நடித்த
அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
ப.நேரம் : 10.30,2.30,6.30,9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஸ்ரீகாந்த் ,மீரா ஜஸ்மின் மற்றும் பலர் நடித்த
மெர்க்குரிப்பூக்கள்
கா.நே : (பு.நே) 10.30, 2.15, 5.30

நாதவ்ஸ் யாழ்ப்பாணம்
பிரபு நவ்யாநாயர் நடித்த
பாசக்கிளிகள்
கா.நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

# பெண் தற்கொலை குண்டுதாரி பயன்படுத்திய சிம்காட் சிக்கியது

கொழும்பு—

இராணுவத்தளபதிலெப். ஜெனரல் சரத் பொன்சேகா மீது தாக்குதல் நடத்திய தற்கொலைக் குண்டுதாரி பயன்படுத்தியதாகக் கூறப்படும்செல்போனின் சிம்காட் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மிக நுணுக்கமாக மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது குண்டுவெடிப்பு நடைபெற்ற இடத்துக்கு அருகில் இந்த செல்போன் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸ் தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்துக்கும், அதனை அண்மித்த பிரதேசங்களுக்கும் வெளியார் வருவதற்கு அனுமதியளிக்கப்படாததாலும்- சம்பவம் நடைபெற்ற இடம் சீர்குலைக்கப்படாமல் இருந்ததாலும் இந்தத் தொலைபேசியின் பாகங்களைக் கண்டுபிடிக்க முடிந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பாகங்கள் இரகசியப்பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இரகசியப் பொலிஸ் குழுவினர் அந்த தொலைபேசி பாகங்களில் இருக்கும் இரகசிய எண்களை இரசாயன பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

அதன் மூலம் கிடைக்கும் தகவல்களின் மூலம்- இந்தச் சம்பவத்துடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்புடையவர்கள் பற்றிய விபரங்களைக்கண்டறிய முடியும் என்று இரகசியப் பிரிவினர் நம்புகின்றனர்.

தொலைபேசி வலையமைப்பு பரிசோதனைகளினூடாகவே கட்டுநாயக்க தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பல சந்தேக நபர்களின் விபரங்கள் திரட்டப்பட்டன. அந்தச் சோதனைகளை மேற்கொண்ட பொலிஸ் குழுவே இந்தமுறையும் விசாரணை நடத்துகிறது.

இராணுவத் தளபதியை இலக்குவைத்து தாக்குதல் நடத்திய பெண்ணின் செல்போனுக்கு, தாக்குதல் நடைபெற சில நிமிடங்களுக்கு முன்னதாகவே அழைப்பு வந்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் இரகசியப் பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர்.

அவருக்கு வந்த அழைப்பில்- இராணுவத்தளபதி அலுவலகத்திலிருந்து வீட்டுக்குச் செல்வதாகக் கூறப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

குண்டுவெடிப்பு நடைபெற்ற நாளில் சுமார் மூவாயிரம் பேர் இராணுவத் தலைமையகத்துக்கு வந்ததாகத் தெரியவருகிறது.

தற்கொலைதாரியும் அதில் இருக்கலாமென்றும், இதற்கமைய தற்கொலைதாரி எந்தப் பெயரில் இராணுவத்தலைமையகத்துள் பிரவேசித்தார், அவர் பயன்படுத்திய அடையாள அட்டையின் இலக்கம் என்ன, அதில் அவரின் முகவரியாக என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பவற்றை ஆராய இரகசியப்பொலிஸ் பிரிவின் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று இராணுவத் தலைமையத்துக்கு வந்தவர்களின் பெயர்களைப் பதிவேட்டில் சோதனையிட்டு தற்கொலைதாரி யாரென்பதை சரியாகக் கண்டறிவதே அவர்களுக்கான பணியாகும்.

அவரைக் கண்டுபிடித்த பின்னர் அவர் இதற்கு முன்னர் எத்தனை முறை இராணுவத்தலைமையகத்துக்கு வந்துள்ளார், அந்தச் சந்தர்பங்களில் அவருடன் யார் யார் வந்துள்ளனர் ஆகிய விபரங்கள் கண்டறியப்படவுள்ளன.

தற்கொலை குண்டுதாரி போலி அடையாள அட்டைய்ய காண்பித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்ற போதிலும், குறித்த ஒரு இலக்கை எட்டுவதற்கு இந்தத் தகவல்கள் உதவலாம் என்றும் நம்பப்படுகிறது.

தற்கொலைத் தாக்குதல் நடத்திய பெண் உண்மையிலேயே கர்ப்பிணி. இவர் இராணுவ வீரர் ஒருவரின் மனைவி என்ற போர்வையில் பலமுறை இராணுவ மருத்துவமனையில் சிகிச்சைக்கு வந்துள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய இந்தப்பெண் தனது இராணுவ கணவராக யாரின் பெயரைக் குறிப்பிட்டுள்ளார் என்பதைக் கண்டறிய அட்டைகள் சோதனையிடப்பட்டு வருகின்றன எனவும் இரகசியப்பொலிஸ் பிரிவு வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

# உயிரிழந்தோர் தொகை பத்தாக அதிகரிப்பு!

கொழும்பு—

இராணுவத் தலைமையகத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை பத்தாக உயர்ந்துள்ளது என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த செவ்வாயன்று இராணுவத் தலைமையகத்தில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்து அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இராணுவத் தளபதி உட்பட 7பேர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இவர்களில் ஐந்து பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் உள்ளனர். இராணுவத் தளபதியின் நிலை குறித்து விசேட வைத்திய குழுவினர் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இராணுவத் தளபதியின் உடல் நிலை தேறிவிடும் என தான் நினைப்பதாகவும் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## திருகோணமலை தாக்குதல் குறித்து

# விடுதலைப் புலிகளின் பிரசாரத்தால் ஜனாதிபதி மகிந்த கடும் அதிர்ச்சி!

கொழும்பு—

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் முப்படையினரும் இணைந்து அப்பாவிப் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியது தொடர்பாக விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் பிரசாரம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடும் அச்சமடைந்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கூட்டப்பட்ட அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த பேசியதாவது -

நாட்டின் அனைத்துக் கட்சிகளும் விடுதலைப் புலிகளுக்கு இடமளிக்கும் வகையில் கருத்துத் தெரிவிக்காமல் அவதானமாக இருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் உண்மையான யுத்தத்தைவிட அவர்கள் வெளிநாடுகளில் மேற்கொள்கின்ற உண்மைக்கு மாறான பிரசார யுத்தம் மிகவும் ஆபத்தானது.

இராணுவத்தினர் மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கையை ஒரு பாரிய குற்றமாக்க தமிழீழ விடுதலைப் புலிகள் முயற்சிக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பாரதூரமான வகையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதையடுத்தே, இராணுவம் தற்காப்பு நடவடிக்கையை மேற்கொண்டது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண எந்தவித தியாகத்துக்கும் தயாராக இருக்கிறோம். அனைத்துக் கட்சியினரும் எமக்கு ஒத்துழைப்பளிக்க



வேண்டும்.

இராணுவத் தலைமையகம் மீதான தாக்குதலைத் தொடர்ந்து அரசாங்கத்துக்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவளித்தமைக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

## மே 5 ஆம் திகதி விசாரணை

கொழும்பு—

சுயாதீன ஆணைக்குழுக்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்தை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கின் விசாரணை மே 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நல்ல அரசாங்கத்துக்கான பொதுமக்கள் இயக்கம் சார்பில் ஜனாதிபதி மகிந்தவின் நியமனங்களை எதிர்த்து வழக்குத் தொடரப்பட்டது.

கடந்த வாரம் இந்த வழக்கில் பிரதிவாதிகளாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்த 41 பேருக்கும் விளக்கம் கேட்டு மனு அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதிகள் கே. சிறீபவன் மற்றும் சிசிர டீ ஆப்ரியூ முன்னிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணையை எதிர்வரும் மே 5 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

# பொதுமக்களின் பாதுகாப்பை அரசு–புலிகள் உறுதிப்படுத்தவேண்டும்

## ஐ. நா. தெரிவிப்பு

கொழும்பு—

மனிதாபிமான உதவிகளைப் பெறும் வகையில் பொதுமக்களின் பாதுகாப்பைத் தமிழீழ விடுதலைப் புலிகளும், இலங்கை அரசாங்கமும் உறுதிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐ.நாவின் மனிதாபிமான உதவிகளுக்கான ஒருங்கிணைப்பாளர் ஜோன் ஹொக்லெண்ட் கூறியுள்ளதாவது -

மக்கள் உயிரிழப்பு, புதிய இடப்பெயர்வுகள், வர்த்தக நிலையங்கள் நிர்மூலமாக்கப்படுதல், மனிதாபிமான பணியார்களுக்கு அச்சுறுத்தல் ஆகியவை பொதுமக்களுக்குப் பாரிய பதற்றத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மனிதாபிமான உதவிகளையும், சுனாமி அனர்த்த மீளமைப்பு உதவிகளையும் மேற்கொண்டதில் இது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இலங்கையின் அண்மைய வன்முறைகளில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இனப்பிரச்சினையால் மூன்று லட்சம் மக்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்துள்ளனர். பாதிக்கப்பட்ட மக்கள் மனிதாபிமான உதவிகளைப் பெறுவதற்கான சூழ்நிலையை அனைத்துத் தரப்பினரும் உருவாக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# நேபாள அனுசரணையாளர் பணியிலும் சொல்ஹெய்மை நியமித்தது நோர்வே

கொழும்பு—

நேபாள அரசாங்கத்துக்கும் - மாவோ போராளிகளுக்கும் இடையேயான பேச்சுக்களுக்கு அனுசரணையாளராக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் செயற்படுவாரென நோர்வே அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேபாளத்தில் ஜனநாயக ஆட்சிக்காக மாவோ போராளிகள் ஆயுதப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் - கடந்த பல ஆண்டுகளாக முடக்கப்பட்டிருந்த நாடாளுமன்றத்தை மீளச் செயற்படுத்த வலியுறுத்தி கடந்த சில வாரங்களாக நேபாளத்தின் 7 கட்சிக் கூட்டணிகளால் மன்னர் ஞானேந்திராவுக்கு எதிராக பாரிய போராட்டங்கள்




முன்னெடுக்கப்பட்டது.

நேபாளத்தை உலுக்கிய இந்தப் போராட்டத்தையடுத்து மன்னர் ஞானேந்திரா, நாடாளுமன்றத்தை மீள உருவாக்க ஒப்புக்கொண்டார். இதையடுத்து 84 வயதான கிரிஜா பிரசாத் கொய்ராலா அந்த நாட்டின் பிரதமராக 7 கட்சிக் கூட்டணியால் தெரிவு செய்யப்பட்டார்.

இதையடுத்து அரசாங்கத்துடனான யுத்த நிறுத்தத்தை மாவோ போராளிகளும் அறிவித்தனர்.

இந்த நிலையில் அரசாங்கத்துக்கும் - மாவோ போராளிகளுக்கும் இடையேயான பேச்சுக்களுக்கு அனுசரணையாளராக நோர்வேயின் எரிக்சொல்ஹெய்ம் செயற்படவுள்ளார்.

எதிர்வரும் மே 2ஆம் திகதி முதல் 5 திகதி வரை அவர் நேபாளத்தில் இது தொடர்பாகப் பல்வேறு சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளார்.



# சரத் பொன்சேகா மீதான தாக்குதல் திருமலை சம்பூரில் நடத்தப்பட்டதாம்!

## சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதுவரின் கதை!

கொழும்பு—

இராணுவத் தலைமையகம் மீது தமிழர்கள் வசிக்கும் திருகோணமலையில் வைத்தே சம்பூரில் தாக்குதல் நடத்தப்பட்டதாக சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதுவர் சுமித் நகுந்தலா தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமிழகத்தின் சென்னையிலிருந்து வெளியாகும் தினமலர் நாளேட்டில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ள சுமித் நகுந்தலாவின் நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இலங்கையில் சம்பூரில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தில் கடந்த 25ஆம் திகதி பெண் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 10 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். இராணுவத் தலைமைத் தளபதி சரத் பொன்சேகா உட்பட 27பேர் பலத்த படுகாயமடைந்தனர்.

விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் பொதுமக்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல. இந்தத் தாக்குதல் இலங்கை இராணுவ முகாம்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலாகும். அதனால் சம்பூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் வசித்துவரும் தமிழர்கள், சிங்களவர்கள், புத்த மதத்தினர், முஸ்லிம் மக்கள் அனைவரும் எவ்வித அச்சமும் அடையத் தேவையில்லை.

பெண் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய பகுதிகளில் பாதுகாப்புப் பணிகளுக்காக இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ விசேட அதிரடிப்படையை அமைத்துள்ளார். அவர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவர். பெண் விடுதலைப் புலிகள் தாக்குதலால் பாதிக்கப்பட்ட சம்பூர் பகுதியில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக ஐந்து கோடி ரூபாவை இலங்கை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. வடகிழக்கு மாகாணப் பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பூர் பகுதியில் வசித்துவரும் மக்களின் எண்ணிக்கையே 16 ஆயிரத்து 500 தான். ஆனால் விடுதலைப் புலிகளோ 40 ஆயிரம் பேர் வசித்து வருகின்றனர். அதில் பலர் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றனர்.

சம்பூர் பகுதியில் வசித்துவரும் தமிழர்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாத வகையில் இலங்கை அரசு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்தில் மொத்தம் 65 ஆயிரம் அகதிகள் வசித்து வருகின்றனர். மண்டபம், வாழவந்தான் கோட்டை உள்ளிட்ட 100 இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டு, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டு வருகிறது.

அவர்கள் மீண்டும் இலங்கை திரும்பி வந்து அமைதியாக வாழ இலங்கை அரசு வழிவகுத்துக் கொடுக்கும். அதனால் அகதிகளை மீண்டும் இலங்கைக்குத் திரும்பிவர இலங்கை அரசு சார்பில் வலியுறுத்தி வருகிறோம் என்று சுமித் நகுந்தலா தெரிவித்தார் என தினமலர் நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

# தலை துண்டிக்கப்பட்ட சடலம் மீட்பு!

முல்லேரியா—

முல்லேரியா அல்பிராம பிரதேசத்தில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் சடலம் ஒன்று நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேச மக்கள் பொலிஸாருக்கு கொடுத்த தகவலையடுத்தே இந்தச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. கடந்த இரு தினங்களில் கொழும்பை அண்டிய பிரதேசத்திலிருந்து மீட்கப்பட்ட ஆறாவது தலை துண்டிக்கப்பட்ட சடலம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# பிளெமிங்கின் இரட்டை சதத்தால் நியூஸிலாந்து வலுவான நிலையில்

கேப்ரவுண் —

தென்னாபிரிக்க - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் கேப்ரவுணில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணி 8 விக்கெட் இழப்புக்கு 535 ஓட்



டங்களைப் பெற்று வலுவான நிலையில் உள்ளது.

முதல்நாள் ஆட்டநேரமுடிவில் நியூஸிலாந்து அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பிளெமிங் ஆட்டமிழக்காமல் 114 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இவருடன் இணைந்து பிராங்ளின் இரண்டாவது ஆட்டத்தைத் தொடர்ந்தார்.

இந்த இருவரும் சிறப்பாக ஆடினர். பிளெமிங் இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்ய, பிராங்ளின் அரைச்சதத்தை அடித்தார்.

தொடர்ந்தும் இருவரும் சிறப்பாக ஆடினர். இந்த ஜோடி 8 ஆவது விக்கெட்டுக்காக 256 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். இந்தநிலையில் இரட்டைச் சதத்துடன் மேலும் அரைச்சதத்தைத் தாண்டியிருந்த பிளெமிங் - 31 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 262 ஓட்டங்களைப் பெற்று பிறின்ஸின் பந்தில் போல்டானார்.

இரண்டாம் நாள் ஆட்டநேரமுடிவில் நியூஸிலாந்து அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 535 ஓட்டங்களைப்



பெற்றிருந்தது. இதில் பிராங்ளின் 9 பவுண்டரிகள் அடங்கலாக 93 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழக்காதிருந்தார்.

# மேற்கிந்திய அணி கப்டனாக இளம் வீரரை நியமித்திருக்கலாம்

## முன்னாள் வீரர் கொலின் கிராப்ட்

லண்டன் —

லாறாவை மீண்டும் கப்டனாக்கியதற்கு பதிலாக முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் கொலின் கிராப்ட் அதிருப்தி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியிருப்பதாவது -

லாறா சிறந்த கிரிக்கெட் வீரர், அதில் யாருக்கும் எந்த சந்தேகமும் கிடையாது. அவர் இரண்டு முறை கப்டனாக இருந்துள்ளார். அப்போது மேற்கிந்தியத் தீவுகள் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்தது.

அப்படிப்பட்ட ஒருவரை மூன்றாவது முறையாகத் தேர்வுக் குழுவினர் கப்டனாக்கியது தவறானது. தேர்வுக் குழுவினரின் இந்த முடிவு துரதிஷ்டவசமானது.

இளம் வீரர் ஒருவரை கப்டனாக நியமித்திருக்கவேண்டும். லாறா கப்டனாக இருந்த காலத்தில் மேற்கிந்தியத் தீவுகள் எந்த முன்னேற்றமும் அடைந்ததில்லை. இவ்வாறு கொலின் கிராப்ட் கூறினார்.

கொலின் கிராப்ட் 27 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 125 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

# கவாஸ்கர் மீது குற்றமில்லை என்கிறார் நிரஞ்சன் ஷா

மும்பை —

ஆட்ட நடுவரைத் தெரிவு செய்த விடயத்தில் கவாஸ்கர் மீது எந்தக் குற்றமும் இல்லை. ஒருதலைப்பட்சமாக செயல்படுகிறார் என்ற பாகிஸ்தானின் குற்றச்சாட்டு கண்டிக்கத்தக்கது என்கிறார் இந்திய கிரிக்கெட் சபை செயலர் நிரஞ்சன் ஷா.

அண்மையில் சர்வதேச கிரிக்கெட் சபை சார்பில் ஆட்ட நடுவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்தத் தேர்வில் ஐ.சி.சி, கிரிக்கெட் குழுத் தலைவர் கவாஸ்கர், ஒருதலைப்பட்சமாக செயல்பட்டார் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை குற்றம் சாட்டியது.

மேலும் அவரை பதவியிலிருந்த நீக்குமாறும் கூறியது. இதற்கு பெரும் கண்டனம் தெரிவித்துள்ளார் இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளர் நிரஞ்சன் ஷா. அவர் அளித்த பேட்டியில் -

நடுவர் தேர்ந்தெடுக்கப்பட்ட விவகாரத்தில் கவாஸ்கர் குற்றமற்றவர். அவர் ஒருவர் மட்டும் தேர்வுக் குழுவில் இடம்பெறவில்லை. சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாகி மல்கம் ஸ்பீட் உட்பட மற்ற உயர் அதிகாரிகளும் குழுவில் இருந்தனர். எனவே, கவாஸ்கர் ஒருதலைப்பட்சமாக நடக்க வாய்ப்பில்லையென நிரஞ்சன் ஷா கூறினார்.

இதேவேளை, கவாஸ்கர் மீது எந்தவித குற்றச்சாட்டும் சுமத்தவில்லை என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இயக்குநர் அப்பாஸ் ஜய்தி கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில் -

கவாஸ்கரின் முடிவில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. யாரோ ஒரு சிலர் தவறான கருத்துக்களை ஊடகங்கள் மூலம் பரப்பி வருகிறார்கள். அவர்கள் யார் என்று தெரியவில்லை. கண்டுபிடிக்கும் பட்சத்தில் தண்டனைக்குள்ளாவார்கள் எனத் தெரிவித்தார்.

# மினி உலகக்கிண்ணத் தொடருக்கு பலமான அணிகளை அனுப்பவேண்டும்

## ஐ.சி.சி தலைவர் ஈசான் மானி தெரிவிப்பு

புதுடெல்கி —

மினி உலகக்கிண்ணத் தொடருக்கு முழு பலம் கொண்ட அணிகளை அனுப்பவேண்டுமென ஐ.சி.சி தலைவர் ஈசான் மானி கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியாவில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் சர்வதேச கிரிக்கெட் சபை சார்பில் மினி உலகக்கிண்ண தொடர் நடைபெறவுள்ளது. இதில் எட்டு நாடுகள் கலந்துகொள்கின்றன. இந்தத் தொடர் பற்றி ஐ.சி.சி தலைவர் ஈசான் மானி அளித்த பேட்டியில் -

மினி உலகக்கிண்ணத் தொடருக்காக ஒவ்வொரு நாடும் தங்களது சிறந்த அணியை அனுப்புமென நம்புகிறேன். உலகக்கிண்ணத்துக்கு அடுத்து மிக முக்கியமானதாகக் கருதப்



படுவது இந்தத் தொடர். இதனால் இதற்கு அவுஸ்ரேலிய அணி தங்களது முக்கிய வீரர்களுடன், முழுப்பலத்துடன் களமிறங்குமென நம்புகிறேன். அவர்கள் ஒருமுறை கூட மினி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றாததால், இந்த முறை அதற்கு அவர்கள் கடுமையாகப் போராடுவர்.

இதுவே கடைசி மினி உலகக் கிண்ணத் தொடராக இருக்குமென பலர் கூறி வருகின்றனர். இது தவறு. வருங்காலங்களிலும் மினி உலகக் கிண்ணத் தொடர் நடைபெறும்.

கிரிக்கெட் போட்டிகளுக்கு இந்தியாவில் மிகுந்த வரவேற்பு உள்ளது. சென்ற முறை நடந்தது போல் விளம்பரதாரர் பிரச்சினைகள் இந்த முறை ஏற்படாதவாறு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

உலகக் கிண்ணத் தொடருக்கு முன் தங்கள் அணியின் பலம், பலவீனங்களை அறிந்து கொள்ள இந்தத் தொடர் அனைவருக்கும் உதவுமென ஈசான் மானி தெரிவித்தார்.

## இங்கிலாந்தின் முன்னணி வீரர்கள்

# மினி உலககிண்ண போட்டியிலிருந்து விலகுமாறு இயன் பொத்தம் வேண்டுகோள்

லண்டன் —

மினி உலகக்கிண்ணப் போட்டியிலிருந்து இங்கிலாந்து அணியின் முன்னணி வீரர்கள் விலகவேண்டுமென்று அந்த நாட்டு முன்னாள் கப்டன் இயன் பொத்தம் கூறியுள்ளார். இது தொடர் அவர் கூறியதாவது -

மினி உலகக்கிண்ணப் போட்டி நடத்தப்படும் திகதி இங்கிலாந்துக்கு உகந்ததல்ல. ஆசஷ் தொடர் தொடங்குவதற்கு 5 நாட்களுக்கு முன்புதான் மினி உலகக்கிண்ணப் போட்டி முடிகிறது.

மினி உலகக்கிண்ணப் போட்டியில் ஆடுவதால், இங்கிலாந்தின் ஆசஷ் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படும். இதனால் இங்கிலாந்து அணியின் முன்னணி வீரர்கள் ஆசஷ் தொடரி



லிருந்து விலகவேண்டுமென பொத்தம் கூறியுள்ளார்.


இதேவேளை, மினி உலகக்கிண்ணப் போட்டியில் அவுஸ்ரேலிய முழுப் பலத்துடன் விளையாடுமென்று அந்த நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இங்கிலாந்துடன் மோதும் ஆசஷ் தொடர் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை என்று அந்த நாட்டு கிரிக்கெட் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்திய - பாகிஸ்தான் டெஸ்ட் தொடர் எப்படி முக்கியத்துவம் வாய்ந்ததோ அதுபோல அவுஸ்ரேலிய - இங்கிலாந்து அணிகள் மோதும் ஆசஷ் தொடர் முக்கியத்துவம் பெற்றது. இரு அணிகளுமே கிரிக்கெட்டில் பரம்பரை எதிரிகளாகுமெனத் தெரிவித்தார்.

மினி உலகக்கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து அணியின் முன்னணி வீரர்கள் விலகினால் அந்த நாட்டுக்கு ஐ.சி.சி அபராதம் விதிக்கும்.

# முதல்தரத்துக்கு அணியை உயர்த்துவதே தனது இலட்சியம் என்கிறார் லாறா



போர்ட் ஓவ் ஸ்பெயின் —

டெஸ்ட், ஒருநாள் தரவரிசைப் பட்டியலில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை முதல் தரத்துக்கு உயர்த்துவதே என் இலட்சியமென கூறியுள்ளார் அணியின் புதிய கப்டனாக பொறுப்பேற்ற பிறைன் லாறா.

அண்மைக்காலமாக மேற்கிந்தியத் தீவுகள் அணி தோல்விப் பாதையில் பயணித்து வருகிறது. கடைசியாக விளையாடிய 11 டெஸ்ட் போட்டிகளில் 1 போட்டியில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

முன்னணி வீரர்கள் தொடர்ந்து மோசமாக ஆடி வருகின்றனர். அடுத்த ஆண்டு உலகக்கிண்ணப் போட்டி மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள நிலையில், அணி மிகவும் மோசமான நிலையில் செயற்பட்டு வந்தது. சந்தர்போல் தலைமையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி, தோல்விகளை மட்டுமே பெற்றுவந்தது.

இந்த நிலையில் தனிப்பட்ட முறையில் ஆட்டத்தில் கவனம் செலுத்தப் போவதாக அறிவித்த சந்தர்போல், கப்டன் பதவியிலிருந்து விலகினார்.

நெருக்கடியான நிலையில், அனுபவம் வாய்ந்த வீரரைக் கப்டனாக தேர்வு செய்ய மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை முடிவு செய்தது.

இதுவரை இரண்டு முறை கப்டன் பதவியைப் பொறுப்பேற்ற லாறா, மீண்டும் கப்டனாகத் தேர்வு செய்யப்பட்டார். கப்டனாகப் பொறுப்பேற்ற பின் லாறா அளித்த பேட்டியில் -

வெற்றி தோல்வி என்பது எல்லா அணிகளுக்கும் பொதுவான விடயம் தான். மேற்கிந்தியத் தீவுகள் அணியை மீண்டும் உலகத்தரம் வாய்ந்த அணியாக உருவாக்குவேன். டெஸ்ட், ஒரு நாள் தரவரிசைப் பட்டியலில் முதல் தரத்துக்கு அணியை உயர்த்த பாடுபடுவேன். இதற்கு அணி வீரர்கள் அனைவரும் நல்ல ஒத்துழைப்பு கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

உலகக் கிண்ணத்துக்கு முன்னதாக அணியை பலம் பொருந்தியதாக உருவாக்குவதே என் இலட்சியமென லாறா கூறினார்.

# உதைபந்தாட்டம்

நெல்லியடி —

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சுடரொளி விளையாட்டுக் கழகமும் -

மாலை 4.30 மணிக்கு கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

# மேற்கிந்திய கிரிக்கெட் மைதானங்களில் மதுபானம் பாவிப்பதற்கு தடைவிதிப்பு

சென்.ஜோன்ஸ் —

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் மைதானங்களில் மதுபானங்கள் எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளில் கிரிக்கெட் ஆட்டங்களைப் பார்க்க வரும் ரசிகர்கள் கைகளில் பியர் போத்தல்களோடு வருவதைக் காணமுடியும். ஆட்டத்தை ரசித்தபடியே அவர்கள் மதுபானத்தை அருந்தி இரட்டிப்பு மகிழ்ச்சியில் மிதப்பார்கள். அரங்கிலேயே மதுபான விற்பனையும் நடைபெறும்.

அடுத்த ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் உலகக் கிண்ணப் போட்டி நடைபெறுவதையொட்டி அந்த நாட்டு கிரிக்கெட் சபை மதுபானத்தை மைதானத்துக்குள் கொண்டுவரத் தடை விதித்துள்ளது. மது அருந்துபவர்களால் ஆட்டத்துக்கான பாதுகாப்பில் பாதகம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவும், ஐ.சி.சியின் விதிமுறைப் படியும் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மேற்கிந்தியத் தீவுகள் - சிம்பாப்வே அணிகளிடையேயான 7 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் இன்று தொடங்கவுள்ள முதல் போட்டியிலிருந்து மைதானத்தில் மது மீதான தடை அமுலுக்கு வருகிறது.

சர்வதேச கிரிக்கெட் சபை விதிப்படி இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாக மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அதே நேரத்தில் உணவுப் பொருட்கள், பை, கூடை ஆகியவற்றை வழக்கம்போல் சோதனைக்குப் பின்னர் அரங்கினுள் கொண்டு வரலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பில் கைதான தமிழர்களை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## ஜனாதிபதிக்கு மாவை எம்.பி. வேண்டுகோள்

யாழ்ப்பாணம் ———

இராணுவத் தலைமையகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து கொழும்பில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இவர்களை விடுவிப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலையிடவேண்டுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கொழும்புக் குண்டுவெடிப்புக்குப் பின்னர் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் 5 தமிழர்களின் தலை துண்டிக்கப்பட்ட சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதனால் கைது செய்யப்பட்டோரின் உறவினர்கள் பாரிய அச்சத்தில் உறைந்துள்ளனர்.

இத்தகைய கொடூர மரணங்களுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். ஆகையால் கைது செய்யப்பட்டோர் குறித்த விபரங்களைப் படையினரும், பொலிஸாரும் வெளிப்படுத்த வேண்டும்.

இத்தகைய கைது நடவடிக்கைகள், கொடூர மரணங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்க சர்வதேச அளவிலான விசாரணை ஆணையத்தை நியமிக்க வேண்டுகிறோம் என்று அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிலத்தடி நீர் குழாய் உடைந்ததால் யாழ். நகர நீர்விநியோகம் பாதிப்பு



கோண்டாவில் ———

கோண்டாவில் நீர் விநியோக நிலையத்திலிருந்து வரும் நிலக்கீழ் தண்ணீர் குழாய் இலுப்பையடி சந்தி பகுதியில் உடைந்துள்ளதால் - மடத்தடிப்பகுதியிலுள்ள தண்ணீர் தாங்கியூடான நீர்விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இதனால் யாழ். நகரம், பாசையூர், குருநகர், கொழும்புத்துறை , நவாலி ஆகிய பகுதிகளுக்கான தண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

பழுதடைந்த குழாய்களை பொருத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் நாவலர் வீதியூடான போக்குவரத்து தடைசெய்யப்பட்டுள்ளது.

மாநகர சபை நீர் வளங்கல் பகுதியினர் இந்தக் குழாயைப் பொருத்தும் நடவடிக்கையில் துரிதமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தத் திருத்த வேலைகள் ஓரிரு தினங்களில் பூர்த்தி அடைந்துவிடும் என மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

# மீசாலை சந்தியில் படையினர் இளைஞர்கள் மீது தாக்குதல்

மீசாலை ———

தென்மராட்சி மீசாலை சந்திப் பகுதியிலுள்ள இராணுவத்தினரால் இளைஞர்கள் தாக்கப்பட்டு வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மீசாலை சந்திப் பகுதியிலுள்ள இராணுவத்தினர் இந்தப் பகுதியால் மோட்டார் சைக்கிளில் செல்லும் இளைஞர்களில் சிலரை மறித்து தாக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 24ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்ற மூன்று இளைஞர்கள் வழி மறிக்கப்பட்டு தாக்கப்பட்டனர். மோட்டார் சைக்கிளை உறவினர்கள் வந்தாலே தரமுடியும் எனப் படையினர் கூறினர். பின்னர் உறவினர் சென்றே மோட்டார் சைக்கிளை பெற்றுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்பும் இந்தப் பகுதியில் இரு இளைஞர்கள் மறிக்கப்பட்டு இராணுவத்தினரால் தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பண்ணிசை வகுப்பு

யாழ்ப்பாணம் ———

அகில இலங்கைத் திருமுறை மன்றம் தேவாரப் பண்ணிசைமாணி பட்டத்துக்கான இலவசத் தேவாரப் பண்ணிசை வகுப்புக்களை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலத்தில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மாலை 4.30 மணிமுதல் நடத்தி வருகின்றது. விரும்பியவர்கள் பங்குபற்றி பயன்பெறலாம்.

# ஐம்பது வருடங்களாக குடியிருக்கும் காணியை பகிர்ந்தளிக்க கோரிக்கை

அராலி ———

அராலி ஊரத்தியில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக வசித்துவரும் 20 குடும்பங்களுக்கு வலிகாமம் மேற்கு பிரதேசசபை காணிகளை பகிர்ந்தளிப்பதற்கு, உரிய நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் வலி - மேற்கு பிரதேச சபைக்கு சொந்தமான காணியில் சுமார் 20 குடும்பங்கள் 50 வருடங்களுக்கு மேலாகக் குடிசைகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வாழும் குடும்பங்கள் வருடந்தோறும் பிரதேசசபைக்கு வரிப் பணத்தை செலுத்தி வருகின்றன. எனவே, இந்த காணித்துண்டுகளைப் பகிர்ந்தளிக்குமாறு அந்தக் குடும்பங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதேவேளை இந்தக் காணிகளைப் பகிர்ந்தளிப்பதற்கு, நடவடிக்கை எடுக்குமாறு வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரதேச சபையினருக்குப் பல தடவைகள் வேண்டுகோள் விடுத்தும் உரிய நடவடிக்கை எதனையும் பிரதேச சபையினர் மேற்கொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக வலிமேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும், பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அராலி - ஊரத்தியில் குடியிருக்கும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட 20 குடும்பங்களும் காணி சொந்தமாக இல்லாமையால், உலகவங்கியால் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டம் மற்றும் பிற அபிவிருத்தி நடவடிக்கைகளின் பயன் எதனையும் பெற முடியாமலுள்ளது.

# நடைபாதை வியாபாரத்தை மாநகர சபை அகற்றியது

யாழ்ப்பாணம் ———

யாழ்.முனீஸ்வரன் வீதியில் போக்குவரத்துக்குத் தடையாக இருந்த நடைபாதை வியாபார நிலையங்கள் யாழ்.மாநகரசபையால் அகற்றப்பட்டுள்ளதாக ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

முனீஸ்வரன் வீதியில் நடைபாதை வியாபாரத்தில் பெருமளவானவர்கள் ஈடுபட்டு வந்ததால் அந்த வீதியூடான போக்குவரத்தில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் நடைபாதை வியாபார நிலையங்கள் முழுவதும் அகற்றப்பட்டு போக்குவரத்து சிரமங்கள் தவிர்க்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நகரில் தனியார் மினிபஸ் தரிப்பிடத்தில் ஏற்பட்டுள்ள சன நெரிசலும் இதன் மூலம் குறைவடையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பாவனையாளர் பாதுகாப்பு புதிய நிர்வாகிகள் தெரிவு

கொக்குவில் ———

யாழ். பிரதேச செயலகப் பிரிவின் பாவனையாளர் பாதுகாப்புக் குழுப் பொதுக்கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது கீழ்க்கண்டோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பாவனையாளர் பாதுகாப்புச் சபையின் தலைவர் து.மரியரத்தினம், உப தலைவர் நா.தனேந்திரன், செயலாளர் மி.யேசுதாசன், உபசெயலாளர் பு.சிறி பாலகிருஷ்ணன், பொருளாளர் எ.சில்வஸ்ரர் மேலதிக உபதலைவர் க.தவஸ்கந் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

எம்.எஸ்.ஜே.ஜெலீல், சா.கிரிதரன், சு.நவமணி, அ.க.ஏனெஸ்ட், ஏ.சி. துவான் புத்திரா, டெ.லோகேஸ்வரி, கே.இராஜரட்ணம், இ.பி.ஜெபதாஸ், த.சதீஸ்குமார் ஆகியோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(206)

# பால பண்டித பரீட்சைகள் மே மாதம் நடைபெறும்

யாழ்ப்பாணம் ———

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்தும் சைவ சித்தாந்த பிரவேச, பால பண்டிதர் தேர்வுகள் மே மாதம் 5,6,7 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் நாவலர் மகாவித்தியாலயம், மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைக்கு 120 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான நேரசூசிகை, சுட்டிலக்கம் என்பன அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவை கிடைக்கப் பெறாதோர் இல: 66 கல்லூரி வீதி, நீராவியடி எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாமென தேர்வுச் செயலாளர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

# திருக்குறள் மனனப் போட்டி மாவட்ட மட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம் ———

இந்த வருடத்துக்கான திருக்குறள் மனனப் போட்டியின் மாவட்ட மட்ட முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு -

கீழ்ப்பிரிவு 1 (தரம் 1,2)

1 ஆம் இடம் - ஞா.ஆன்றசிகா (மானிப்பாய் சென். ஆன்ஸ் பாடசாலை). 2 ஆம் இடம் - சி.கரணீதரன் (யாழ். சென் பெனடிக் வித்தியாசாலை), 3 ஆம் இடம் - ம.ஜெனோசோ ( இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை).

கீழ்ப்பிரிவு 11 (தரம் 3,4,5)

1 ஆம் இடம் -அ.அமிர்தவர்சினி (மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை), 2 ஆம் இடம் -த.நிலக்ஷிகா (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்), 3 ஆம் இடம் -த.வராஜினி (கல்வியங்காடு இ.த.க.பாடசாலை).

மத்திய பிரிவு

1 ஆம் இடம் -க.ஜவாணி (இந்து மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் -க. ஜஸ்மிதா (இணுவில் இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம் -க.ஜசிந்தா (கொக்குவில் இந்து கல்லூரி).

மேற் பிரிவு

1 ஆம் இடம்- க.கனகதுர்க்கா (வேம்படி மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் - சி.துஷ்யந்தி (இந்து மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம் - யோ.சரண்யா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

அதிமேற் பிரிவு

1 ஆம் இடம்- ம.குருப்பிரியா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம்- கி.நிறோஜா (சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), 3 ஆம் இடம்- ஜெ.பத்மலோஜினி (கொக்கு வில் இந்து கல்லூரி).

விசேட பரிசு பெறுபவர் தரம் 1

இ.ஜெனோஜன் (நவாலி சென். பீற்றர்ஸ் மகா வித்தியாலயம்).



யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் அண்மையில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி க.பேரம்பலம், முன்னாள் அதிபர் .அ.சிவபாதசுந்தரம் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

# வீதி புனரமைப்பு துரித கதியில்

கொக்குவில் ———

முப்பது வருடங்களுக்கு மேலாக செப்பனிடப்படாமல் இருந்து வந்த வண்ணார்பண்ணை வடமேற்கு நாவலடி வீதி புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

மேற்படி வீதியின் புனரமைப்புச் சம்பந்தமாக 'நமது ஈழநாடு' பத்திரிகையில் செய்திக் குறிப்பொன்றும் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(206)

## பால் உற்பத்தி மாதிரி கிராமங்கள் தெரிவு

பன்னாலை ———

ஒவ்வொரு கால்நடை வைத்திய நிலையங்களிலும் பால் உற்பத்தி மாதிரி கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு கிராமத்திலும் பத்து பண்ணையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மாட்டுத் தொழுவம் அமைப்பதற்கென தலா இருபதினாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகச் சுகாதார உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அத்துடன் பால்பதனிடல் தொழிற்சாலைகளுக்கு பால் பதனிடல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் கால்நடைகளுக்கான மருந்துகள் இலவசமாக கால் நடைத் திணைக்களத்திலிருந்து வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(72)

## மனைப் பொருளியல் கருத்தரங்கு

அரியாலை ———

இந்தியாவிலிருந்து வருகை தந்த மனைப்பொருளியல் நிபுணரான செல்வி பி.குலதிலகராஜாவின் மனைப் பொருளியலின் செல்வாக்கு பற்றிய கருத்தரங்கு - அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம் பெற்றது.

(55)

நிர்மலனின்

# புதிதாய்ப் பிறப்போம்


லாரா - 'பிறர் உழைப்பில் வாழ்வதா'

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் பற்றி மேலும் சில மோசமான செய்திகள். அணித்தலைவர் சிவனரெய்ன் சந்தர் போல் ராஜினாமாச் செய்கிறார். இவர் தலைமை தாங்கிய 14 டெஸ்ட் ஆட்டங்களிலும் தோல்வி. 16 ஒரு நாள் போட்டிகளில் 14இல் தோல்வி. தோல்விகளே இயல்பாகிப் போய்விட்ட மேற்கிந்திய அணியில் சந்தர்போல் குற்றம் சாட்டப்பட வேண்டியவர் அல்ல. ஆனால், சர்ச்சை இல்லாமல் ஒரு அணித்தலைவரை நியமித்துக் கொள்ள முடியாத தர்ம சங்கடமான நிலையில் WICA இருக்கிறது என்பது தான் ஆதங்கம்.

இந்த நிலையில்தான் டெரன் கங்கா, யார் மேற்கிந்திய அணியின் தலைவராக வந்தாலும் நாங்கள் ஒன்றுபட்டு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். இது கவிழப் போகும் அரசுக்கு ஆதரவு தேடும் ஈனஸ்வரமாகக் கேட்கிறது. கேள்விக்கிடமற்ற வகையில் ஒரு அணித்தலைவரை நியமிக்கும் நிலையில் மேற்கிந்திய கிரிக்கெட் இல்லை என்பது துயரம் தான்.

இதில் இன்னும் மோசமான நிலை என்னவென்றால் வீரர்கள் சங்கம் தமது கிரிக்கெட் ஒப்பந்தம், சம்பளம் தொடர்பில் மீண்டும் WICAவுடன் மோதத் தொடங்கியுள்ளது. இவ்விடயத்தில் வீரர்கள் சங்கத்துக்கு எதிராகக் காட்டமான கருத்துக்களை முன்னாள் அணித்தலைவர் ரிச்சி ரிச்சட்சன், மற்றும் வேகப் பந்துவீச்சாளரும் ஒரு கால கட்டத்தில் மேற்கிந்திய அணிப் பயிற்றுனருமாக இருந்த அன்டி றொபட்ஸ் இருவரும் வைத்துள்ளனர். பணப்பேய்கள் இந்த வீரர்கள் என்று இவ்விருவரும் நிறைய விடயங்களைச் சுட்டிக்காட்டி சலிக்கின்றார்கள். இதில் ஒரு விடயத்துக்கு இப்போதைய பந்தா வீரர்கள் பதில் கூறியே ஆகவேண்டும்.

அதாவது ஆனானதொரு அணியாக இருந்து கொண்டு DEMAND பண்ணினாலும் பரவாயில்லை. தரவரிசையில் அதலபாதாளத்தில் இருந்து கொண்டு, சம்பளத்தை அதிகரித்துத்தா என்று கேட்க இவர்களுக்கு வெட்கம் இல்லையா என்று கேட்கிறார்கள் இவ்விருவரும். நியாயமான கேள்விதானே இது?

இவர்களைத் தூக்கி எறியுங்கள். இப்போதைய தோல்விகளைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். பணத்துக்கு அடிமையாகாத நிறையப்பேர் இங்கு இருக்கிறார்கள். அவர்களை அறிமுகப்படுத்திக் கொண்டே வாருங்கள். இன்னும் பத்து வருடங்களில் அருமையானதொரு மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியொன்று பிறக்கும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார்கள்.


அன்டி றொபட்ஸ் - 'உழைப்பால் மட்டும் உயர்ந்தவர்'

இதுதான் உண்மை. சர்வதேச தரம் வாய்ந்த கிரிக்கெட் அணி என்ற தரத்துக்குத் தகுதியில்லாத இன்றைய மேற்கிந்திய அணி இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன எல்லாம் ஒன்றுதான். தோற்பதற்கென்றே களம் இறங்கும் ஒரு அணியென்றால் இன்றைக்கு அது மேற்கிந்தியத்தீவுகள் அணிதான். பங்களாதேஷ், கென்யா கூட வெல்ல வேண்டும் என்றுதான் எந்தக் கிரிக்கெட் வல்லரசுடனும் மோதுவார்கள். ஆனால், இவர்கள் உணர்ச்சியே இல்லாதவர்களாகத் தான் இருக்கிறார்கள். ஆகவே ரிச்சி ரிச்சட்சன், அன்டி றொபட்ஸ் இருவரும் கூறியதற்கு இணங்க இவர்களைத் தூசு தட்டிப்பயன்படுத்தலாம் என்று நினைக்காமல், தூக்கிக் குப்பைக் கூடையில் போடுங்கள். மேற்கில் ஒரு சூரியன் உதிக்கும்.




மக்டலினின்

# பணம் மட்டும் போதாது


அப்ரீடி – 'இளமை இரும்பலலவா'

எதையோ பிடிக்கப்போய் எதையோ பிடித்த கதை என்று ஒன்றுண்டு. இது இந்தியாவும், பாகிஸ்தானும் பரஸ்பரம் நிறைய கிரிக்கெட்ஆடுவோம். நட்பை வளர்ப்போம் என்று கூறியதற்கும் பொருந்தும் போல இருக்கிறது.

இந்த இரண்டு நாடுகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர்புகள் குறித்து பாகிஸ்தான் சிறிது அலர்ட் ஆகிவிட்டது போலத் தெரிகிறது. இதற்கு முக்கிய காரணமாகக் காட்டப்படுவது வீரர்களுக்கு ஓய்வில்லாமல் போவது. இதன் காரணமாக சிறந்த வீரர்களைக் குறுகிய காலத்திலேயே இழந்து விடும் நிலை ஏற்பட்டு விடும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அஞ்சுகிறது. 2004இல் இருந்து இன்று வரை இவ்விரு நாடுகளும் மூன்று தொடர்களில் விளையாடி விட்டன. அண்மையில் அபுதாபியில் இரண்டு ஒரு நாள் போட்டிகளில் கலந்து கொண்டன.

இது பற்றிப் பேசும் போது இந்திய, பாகிஸ்தான் மண்ணில் அல்லாது வேறு இடங்களிலும் ஆட்டங்களை (இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான) மட்டுப்படுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் விரும்புவதாகத் தெரிகின்றது.


யுவராஜ்சிங் - 'இரும்பு முறியுமே'

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகளை உலகின் பல பாகங்களிலும் நடத்த ஆர்வமாக இருக்கிறார்கள். இது எமக்குப் பெருமை தான். ஆனால் இதற்காக எமது அணியைப் பலவீனப்படுத்த முடியாது.

இன்னொருபுறம், இருதரப்பும் பரஸ்பரம் உபகண்டத்தில் விளையாடும் போது கிடைக்கும் வருமானத்திலும் வீழ்ச்சி காணப்படுகின்றது. 2004ஆம் ஆண்டு கிடைத்த வருவாயை இப்போது எதிர்பார்க்க முடியவில்லை. அதாவது அபரிதமான கிரிக்கெட் ஆட்டங்களும் ரசிகர்களைச் சலிப்படையச் செய்து விடும் என்கிறார்கள் பாகிஸ்தானியர்கள்.

பாகிஸ்தானின் இந்தச் சிந்தனைப்போக்குப் பற்றி என்ன நினைக்கிறது என்று தெரியவில்லை. பாகிஸ்தானின் சிந்தனைப் போக்கு வீரர்களின் நலன் பொறுத்து ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றே. ஆனால் உலகிலேயே மிகப் பெரிய பொருளாதார பலத்தைக் கொண்டது இந்தியக் கிரிக்கெட் சபை. இவர்கள் தமது "தங்க முட்டை வாத்து" திட்டங்களைக் கைவிட முன்வருவார்களா தெரியவில்லை. ஆனால், பாகிஸ்தான் இந்த விடயத்தில் இறுக்கமாகத்தான் இருக்கும் போலத் தெரிகிறது. ஏனெனில் தாயகமண் தவிர்ந்த ஏனைய நடுநிலை மைதானங்களில் தங்களால் கிரிக்கெட் விளையாட முடியாது என்று இந்தியாவிடம் சொல்லி விட்டதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கூறிவிட்டது. இதேவேளை 2006இல் பாகிஸ்தான் இந்தியா செல்லவுள்ளது. 2007இல் இந்தியா பாகிஸ்தானுக்குச் செல்லவுள்ளது. எதுவும் அளவுக்கு மிஞ்சினால் தெவிட்டும். அளவாக இருந்தால் நல்லது தான்.

ஜெயராட்டின்

# ஏன் நம்பிக்கையில்லையா?

உலகக் கிண்ண உதை பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட இன்னும் நாற்பது நாட்களே உள்ளன. மேலும் இந்த முறை வெற்றிக் கிண்ணத்தை முத்தமிடும் சந்தர்ப்பம் கூடுதலாக பிரேசில் நாட்டுக்கே இருக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ள நிலையில், எங்கேயோ ஒரு குரல் புதுராகம் பாடுகிறது. அதுவும் பிரேசில் நாட்டில் இருந்து வருகிறது. அதுவும் பிரேசில் தேசிய அணியின் பயிற்றுனர் கார்லொஸ் அல்பேட்டோ பெரெய்ராவின் குரலாக இருக்கிறது.


பீலே - 'ஏற்றுக்கொள்ளமாட்டார்'

நாம் எவ்வாறு கிண்ணத்துக்கு அருகில் இருப்பவர்களாகக் கருதப்படுகிறோமோ அதுபோலவே ஜேர்மனியும், இத்தாலியும் கூடுதல் சந்தர்ப்பம் கொண்ட நாடுகளாக இருக்கின்றன என்கிறார். அவர் குறிப்பாக ஜேர்மனியே வெற்றிக் கிண்ணம் பெறும் கூடுதல் சந்தர்ப்பம் கொண்டது என்றும், தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற (1982, 86, 90) பெருமையும் இதுவரையில் ஏழுமுறை இறுதிப் போட்டிக்களுக்கு இவர்கள் தகுதி பெற்றவர்கள் என்றும் கூறுகிறார்.

மறுபுறம் தன் வீரர்கள் கவனமெடுக்கவேண்டிய சில விடயங்களையும் சுட்டிக் காட்டுகிறார். தம் கழுத்தில் சூடப்பட்டிருக்கும் புகழ் மாலைகளையெல்லாம் சற்றுக் கழற்றி வைத்துவிட்டு, யதார்த்தத்தை எம் அணியின் நட்சத்திர வீரர்கள் புரிந்து கொள்ள வேண்டும். திறமை மட்டும் கிண்ணத்தைக் கையகப்படுத்தக் காணாது. முழு அர்ப்பணிப்பும் வேண்டும். கடுமையாகப் பயிற்சிகள் செய்யவேண்டும். இவற்றைப் பின்பற்றினால் தான் ஆறாவது முறை உலகக் கிண்ணத்தைச் சுவீகரிப்பது பற்றி பிரேசில் யோசிக்க முடியும் என்றார் அவர்.




றொனால்டோ - 'காட்டாற்று வெள்ளம்'

எமது வீரர்கள் பெரும் நட்சத்திரங்கள் என்பதையும், பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான ஒப்பந்த வீரர்கள் என்பதையும் மறந்துவிட வேண்டும். மாறாக 200 மில்லியன் மக்கள் பிரேசில் நாட்டில் இவர்களின் வெற்றிக்காகக் காத்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும் என்கிறார்.

ஒரு சிறிய உதாரணத்தை கார்லொஸ் எடுத்துக் காட்டுகிறார். உலக நாயகன் றொனால்டின்ஹோ நவம்பர் மாதத்தின் பின் பிறேசில் அணிக்காக விளையாடவில்லை. பார்சலோனா கழகத்துக்கு அவர் எப்படி ஜமாய்க்கிறாரோ அதுபோல பிரேசிலுக்கும் பிரகாசிக்கவேண்டும் என்று பிரேசில் மக்கள் விரும்புகிறார்கள். ஆனால் கடந்த எட்டு மாதங்களாக பிரேசிலில் றொனால்டின் ஹோவைக் காணமுடியவில்லை என்பதை நாங்கள் உணரவேண்டும் என்பவர் - உலகக் கிண்ணப் போட்டிகள் என்பது வேறு. இதற்கு பிரத்தியேகமான பல விடயங்கள் ஒன்றிணைய வேண்டும் என்கிறார். இன்னும் நாற்பது நாட்களில் இவையெல்லாம் ஒன்றிணைவது பிரேசிலுக்கா? ஜேர்மனுக்கா? இத்தாலிக்கா? என்பது தெரிந்து விடும்.

விமலனின்

# அதிகாரப் பறிப்பா? பகிர்வா?



பொப் வூல்மர் - 'நான் கறிவேப்பிலையா'

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக பொப் வூல்மர் பதவியேற்று சுமார் இரண்டு வருடங்கள் உருண்டோடிவிட்டன. இவரது காலத்தில் பாகிஸ்தான் அணி அவ்வப்போது சில சறுக்கல்களைச் சந்தித்தாலும், தற்போது ஒருநாள் மற்றும் டெஸ்ட் தரவரிசையில் நான்காம் இடத்தில் இருந்து வருவது இவரின் திறமையை புடமிட்டுக் காட்டுவதாகவே உள்ளது.

ஆனாலும் தரவரிசை விடயத்தில் முதலாமிடத்தைப் பிடிப்பதே சர்வதேச அணிகளின் இலக்காக இருக்கிறது. அந்தப் பாரம் பரியத்துக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் விதிவிலக்காக அமையவில்லை. சொந்த மண்ணில் இந்தியாவிடம் ஒருநாள் தொடரை இழந்த பிற்பாடு அதன் சிந்தனைப் போக்கில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. வூல்மரை விட பந்துவீச்சுப் பயிற்சிக்கென்று றிவர்ஸ் சுவிங் ஜாம்பவான் வக்கார் யுனுசை நியமித்திருந்தது. இப்போது என்னடாவென்றால், அணியின் களத்தடுப்புப் பயிற்சியாளராக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரரான 'பறக்கும் மனிதன்' ஜொன்ரி ரோட்ஸை நியமிக்க முடிவு செய்துள்ளது.

ரசிகர்களுக்கு ரோட்ஸ் பற்றி அறிமுகம் தேவையில்லாதது. 1992 ஐந்தாவது உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தானுடனான போட்டியொன்றில் Gally திசையில் நின்ற ரோட்ஸ் Stump க்கு நேராகப் பறந்து இன்சமாமை ரன்அவுட் செய்திருந்தமை கிரிக்கெட் உலகில் நெஞ்சைவிட்டகலாத ஓர் சம்பவம். அன்றிலிருந்து ஒவ்வொரு போட்டியிலும் களத்தடுப்பில் இவரது பிரசன்னம் சொல்லிக் கொள்ளும்படியாகவே இருந்தது.

பொப் வூல்மரின் அனுமதியின்றி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்தக் கைங்கரியத்தை மேற்கொண்டிருக்க முடியாதென்பது ஊகிக்கக் கடினமானதொன்றல்ல. பந்துவீச்சுக்குப் புறம்பாகவும், களத்தடுப்புக்குத் தனியாகவும் பிரத்தியேகப் பயிற்சியாளர்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நியமித்தால், பொப் வூல்மரை பயிற்சியாளர் பதவியில் அமர்த்தியது எதற்காக?

கிரிக்கெட்டில் ஒருஅணியினது துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு ஆகிய மூன்றும் சமவிகிதத்தில் ஒருங்கிணைந்தாலே அந்த அணியால் வெற்றியை ருசிக்க முடியும். இதிலொன்று சறுக்கினாலும், போட்டி முடிவு பாதகமாகவே அமையுமென்பது துலாம்பரமான விடயம். இதனை சீர்செய்து சமநிலை குழம்பாமல் வைத்திருப்பதே பயிற்சியாளரின் கடமையாகவுள்ளது.

வூல்மரின் செயற்பாடுகள் திருப்தியளிக்கவில்லையென்றால், அவரை நீக்கிவிட்டு பிறிதொரு பயிற்சியாளரை நியமிப்பதே சாலப்பொருந்தக் கூடியது. அதைவிடுத்து தனித்தனிப் பயிற்சியாளர்களை நியமிப்பது வீண் பணவிரயத்தை ஏற்படுத்தும் செயலாகவே படுகிறது.



ஜொன்டி ரோட்ஸ் - 'பறப்பதற்குக் கற்றுக் கொடு'

பொப் வூல்மர் ஒன்றும் சாமான்யப்பட்டவரல்ல. முன்னர் தென்னாபிரிக்க அணிக்குப் பயிற்சியாளராகக் கணிசமான காலம் பணியாற்றியபோது கூட தனித்தனிப் பயிற்சியாளர்களை அவர் அங்கீகரித்ததே இல்லை. அப்படிப்பட்டவர் இன்று பாகிஸ்தான் அணிக்காக தன்னை அடியோடு மாற்றிக் கொண்டமை - பாகிஸ்தான் அணியை தன் னால் இனி முன்னகர்த்த முடியாது என்றதொரு நம்பிக்கை யீனத்தை வெளிப்படுத்துவது போலேயே உள்ளது.

அதேசமயம் பாகிஸ்தான் அணியின் நிரந்தரப் பயிற்சியாளராக வேண்டும் என்ற கனவில் மிதந்த வக்கார் யுனுஸிடம் முன்பு பாகிஸ்தான் கிரிக்கெட்சபை குறுகிய காலத்துக்கு அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக கடமையாற்ற அணுகியிருந்தது. அப்போது குறுகியகாலமென்பதால் அதனை மறுதலித்த அவர் - தற்போது இந்தச் சந்தர்ப்பத்தின் மூலமே அந்த லட்சியத்தை அடைய முடியும் என்பதை உணர்ந்தோ தெரியவில்லை அதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்.

சரி, இவற்றுக்கு மத்தியில் வூல்மர், வக்கார், ரோட்ஸ் வெற்றிக் கூட்டணியால் 2007 உலகக் கிண்ணத்தை பாகிஸ்தான் சுவீகரித்தாலும் - தன்னால்தான் கிண்ணம் வென்றார்கள் என்று பொப் வூல்மரால் மார்தட்டிக் கொள்ள முடியுமா?

எனவே, இந்திய கிரிக்கெட் சபையையே ஆட்டுவிக்கும் கிறேக் செப்பல் போன்ற பயிற்சியாளர்களோடு ஒப்பிடுகையில் - வூல்மர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் இழுத்த-இழுப்புக்கெல்லாம் கட்டுப்படுவது, அவரையொரு முதுகெலும்பில்லாதவராகவே எடுத்துக்காட்டுகிறது.

ஜோசப் கிருஸ்ணாவின்


# ஓய்வா? வியர்வையா?



ரிக்கிபொன்ரி - 'நிற்பவனின் நிலை இது'

தென்னாபிரிக்க டெஸ்ட் தொடர் முடிவடைந்த கையோடு பங்களாதேஷ் வந்திறங்கிய அவுஸ்ரேலிய அணிக்கும் பங்களாதேஷ் அணிக்கும் முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெற அதில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 355 ஓட்டம் என்ற நிலையில் பங்களாதேஷ் இருக்க எல்லோருக்கும் பெரும் ஆச்சரியம். அவுஸ்ரேலியாவுக்கு இந்தளவுக்கு பங்களாதேஷ் ஈடுகொடுக்கிறதே என்று கனவுகள் கற்பனைகள். இறுதியில் இரண்டு டெஸ்டிலும் அவுஸ்ரேலியா வெற்றி, மூன்று ஒருநாள் போட்டிகளிலும் அவுஸ்ரேலியா வெற்றி என்று கதை முடிந்தது.

இப்போது றிக்கி பொண்டிங் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம் . டெஸ்ட் ஒருநாள் ஆட்டத்துக்கான இடைவெளிகள் குறைந்து விட்டன. ஓய்வு என்பதே இல்லை. எனவே, அட்டவணைகள் மாற்றப்பட வேண்டும். ஆட்டங்களுக் கிடையில் இடைவெளிகள் வேண்டும். டெஸ்ட் ஆட்டங்களுக்கு இடையில் இரண்டு நாள் இடைவெளி என்பது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. உண்மையாக சொல்லப்போனால் தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தின் பின் எமது வீரர்களுக்கு ஓய்வுதான் தேவைப்பட்டது. ஆனால், நாங்கள் பங்களாதேஷ் கிரிக்கெட் மைதானத்தில்தான் இறங்கவேண்டியேற்பட்டது. இதன் காரணமா முதல் டெஸ்ட் சிறிது ஆட்டம் கண்டது. எனவே, கிரி போட்டிகளின் அட்டவணைகள் மாற்றப்பட வேண் மூலமே சிறந்த பெறுபேறுகள் பெறமுடியுப் ெ



மியன்டாட் 'நின்றவனின் நிலை அது'

பொண்டிங் கூறிய இடைவெளி, ஓய்வு கருத்துக்கள் முனைப்பாக வெளிவந்து கொண்டி காலம் இது. இது விடயத்தில் சரியான அடியை எடுத்து வைக்கவேண்டியது ICC தான். கிரிக்கெட் போட்டிகள் நீண்ட நேரம் எடுப்பவை. இங்கு வீரர்கள் செயற்பாடு அதிகம் தான். எனவே, இந்த விடயம் மிகவும் கரிசனையுடன் பார்க்கவேண்டிய கட்டத்துக்குள் வந்துவிட்டது உண்மை.

ஆனால், இதனை முன்னாள் பாகிஸ்தான் அணித்தலைவர், வீரர் ஜாவிட் மியன்டாட் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இப்படி பேசுவது அபத்தம் என்பவர் - தாங்களெல்லாம் முன்பு ஆட்டங்கள் கிடைக்காதா என்று ஏங்குவோம். இதே சிந்தனையாக இருப்போம். இப்போது இவர்கள் புதுக்கதை பேசுகிறார்கள். இது தொழில்சார் விளையாட்டு. தொழில் புரிந்தால் தான் ஊதியம். உடல் நோக உழைக்க வேண்டும். உடல் வியர்க்க உழைக்கவேண்டும். ஊதியத்தையும் பெறவேண்டும் என்கிறார். இந்தக் கருத்தும் சரியாகத்தான் தெரிகிறது. வாசகர்கள் என்ன நினைக்கிறீர்கள்?

லிவிங்ஸ்ரனின்

# முடியுமா முடியாதா?

இங்கிலாந்து சென்றுள்ள இலங்கை கிரிக்கெட் அணி டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் பெரிதாக ஏதும் சாதிக்கும் என்ற எதிர்பார்ப்பு அநேகமாக இல்லை என்று சொல்லலாம். இதற்குக் காரணங்கள் பல. ஒன்று அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து, சனத் ஜயசூர்ய ஆகிய ஜாம்பவான்கள் அணியில் இல்லை என்பது. மேலும் இங்கிலாந்தைக் காணாத இளம்வீரர்கள் கூடுதலாக அங்கம் வகிப்பது. அநேகமாக ஆஷ்லி ஜைல்ஸ் தவிர்ந்த ஏனைய முன்னணி வீரர்களான மைக்கல் வோண், ட்ரெஸ் கொதிக், சைமன் ஜோன்ஸ் ஆகியோர் மீண்டும் இங்கிலாந்து அணிக்குத் திரும்புவார்கள் என்பது.




மஹேல - 'உறுதியைக் கைவிடாதே'

இவற்றையெல்லாம் சாதகமற்ற காரணிகளாகப் பார்த்தாலும் முரளி மிக நம்பிக்கையாக இருக்கின்றார். சிலர் இப்பொழுதே எமது அணி தோற்கும் அணி என்ற முத்திரை குத்திவிட்டார்கள். இதுவே எமக்கு ஒரு ஓர்மத்தைக் கொடுத்திருக்கிறது என்று கூறியிருக்கிறார் முரளி. முன்பும்கூட நாங்கள் பலமான அணியாக இல்லை என்று எம்மைக் கதைத்த பல சந்தர்ப்பங்களில் நாங்கள் பலமானவர்கள் என்பதை நிரூபித்துள்ளோம்.

இதுபோலத்தான் இப்போதும் ஒரு வைராக்கியத்துடன் தான் இங்கிலாந்து செல்கின்றோம் என்று தன்னம் பிக்கையுடன் கூறியிருக்கின்றார்.

உண்மையைச் சொல்லப்போனால் மஹேல, சங்ககார மற்றும் வீரர்களுக்கு முரளி, சமிந்தவாஸ் ஆகியோரின் பலம் பெரும் நிழலாக இருக்கும்.

இன்னொருபுறம், இந்தியா வந்த இங்கிலாந்து அணியும், இங்கிலாந்து செல்லும் இலங்கை அணியும் பல விதங்களில் ஒத்ததன்மையைக் கொண்டிருக்கின்றன. புதிய முகங்கள், புதிய சூழ்நிலை என்று நிறைய ஒற்றுமைகள் இருக்கின்றன. எனவே பிளின்ரொப் செய்ததை ஏன் மஹேல ஜயவர்த்தனாவால் செய்ய முடியாது? ஸ்ரோஸ் செய்ததை ஏன் சங்ககார செய்ய முடியாது? அத்தோடு இலங்கை ஒரு FIGHTING அணி. எதனையும் இலகுவில் விட்டுக் கொடுக்காதவர்கள். ஆகவே எதிர்வினை எதிர்வு கூறுபவர் களை தோற்கடிக்க இலங்கை அணியால் முடியும். இதுதான் சவால். இவர்கள் செய்து காட்ட வேண்டும்.



முரளி - 'முழுமையாகப் பொறுப்பெடு'

# தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும்

## பூநகரி தேசிய எழுச்சிப் பேரவை

பூநகரி—

சமாதான ஒப்பந்தத்துக்கு முன்னுரிமை கொடுத்து ஒப்பந்த சரத்துக்கள் நிறைவேற்றப்பட வேண்டும், இல்லையேல் பொங்கியெழும் தமிழராகிய நாம் ஆயுதமேந்துவதன் மூலம் தமிழ் பகுதிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தையும், ஒட்டுக் குழுக்களையும் அழித்து எங்கள் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம் என பூநகரி தேசிய எழுச்சிப் பேரவையினரால் பூநகரிப் பிரதேச செயலர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஜனாதிபதித் தேர்தலில் தேர்தல் மேடைகளில் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பேன் என முழக்கமிட்டீர்கள்.

தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணித்த நிலையிலும், சிங்கள மக்கள் சமாதானத்தை ஏற்படுத்துவதாக வாக்களித்து உங்களை ஜனாதிபதி ஆக்கினர். சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக எங்களின் ஏக பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளுடன் முக்கியமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒப்பந்தம் செய்தீர்கள்.

ஒப்பந்தப்படி எதுவும் செய்யாமல், தாங்களும் தங்களது அரசாங்கமும் - தமிழ் மக்களையும், உலகையும் ஏமாற்ற முனைவது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரிக்க விரும்புகிறோம். தினம் தினம் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். அவர்களது சொத்துக்களும், வீடுகளும், ஆலயங்களும் அழிக்கப்படுகின்றன.

இராணுவத்தின் கொடுமையாலும், ஒட்டுக்குழுக்களின் மோசமான நடவடிக்கைகளாலும் மீண்டும் தமிழ் மக்கள் அகதிகளாக தமது கிராமங்களை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளார்கள். இது ஒவ்வொரு தமிழனையும் வீறுகொண்டு எழச்செய்து, விடுதலைப் புலிகளோடு தாமும் இணைந்து, தங்கள் அரசுக்கெதிராக ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்படும் என எச்சரிக்கிறோம். உடனடியாக தமிழ் மக்களுக்கெதிரான சகல வன்செயல்களும் நிறுத்தப்பட வேண்டும்.

கொலை வெறிபிடித்த இராணுவத்தினரதும், ஒட்டுக்குழுக்களினதும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, இராணுவம் முகாமினுள் முடக்கப்படவேண்டும்.

சமாதான ஒப்பந்தத்துக்கு முன்னுரிமை கொடுத்து ஒப்பந்த சரத்துக்கள் நிறைவேற்றப்பட வேண்டும். இல்லையேல் பொங்கியெழும் தமிழராகிய நாம் ஆயுதமேந்துவதன் மூலம் தமிழ் பகுதிகளில் நிலை கொண்டுள்ள தங்கள் இராணுவத்தையும், ஒட்டுக்குழுக்களையும் அழித்து எங்கள் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம் என உங்களுக்கு எச்சரிக்கை விடுகிறோம் என அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "இந்து உலா" சஞ்சிகை வெளியீடு!

கிளிநொச்சி—

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் இந்து உலா சஞ்சிகை வெளியீடு நேற்றுக் காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி உயர்தர மாணவ மன்றத்தலைவர் சி.சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.ம.பத்மநாதன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

அத்துடன் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று 2001 இற்குப் பின்னர் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (கு,09)

## கிளைமோர் தாக்குதலில் இரு பொதுமக்கள் காயம்!

மன்னார்—

மன்னார் - மடுவீதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நீர் விநியோகத்தில் ஈடுபட்டிருந்த பவுசர் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இரு பொதுமக்கள் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.45 மணியளவில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளுக்கு தண்ணீர் விநியோகித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த வேளையே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகத் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதி பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (மோ)






கிளிநொச்சி - பாரதிபுரத்தில் போரால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான கல்வி, தொழிற்கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் புதிய கட்டட திறப்பு விழா நிகழ்வில் - பெயர்ப்பலகையை உலக கல்வி கலைக்கழக கனடிய கிளையைச் சேர்ந்த ஜெயராஜ் திரைநீக்கம் செய்து வைப்பதையும், ஒட்டுக்கூடத்தை தலைமைச் செயலகப் போராளி அன்பு நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

## சிறுபோக நெற்செய்கையை துரிதமாக மேற்கொள்ளவும்

### அரச அதிபர் தி.இராசநாயகம்



கிளிநொச்சி —

கிளிநொச்சி மாவட்டத்தில் 2006 ஆம் ஆண்டுக்குரிய சிறுபோக நெற்செய்கையை துரிதமாக மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் கேட்டுள்ளார்.

சிறுபோக பயிர்செய்கைக்கென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட குளங்களின் கீழ் தீர்மானிக்கப்பட்ட நாட்களின் முன்னரே பயிர்ச் செய்கையை ஆரம்பிக்குமாறு அவர் விவசாயிகளைக் கேட்டுள்ளார்.

தற்போதைய இராணுவ வன்முறைகள் காரணமாக இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கியுள்ள மக்களுக்கான உடனடித் தேவைகளை வழங்குவதற்கு கிளிநொச்சி மாவட்ட அரச செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் மாவட்ட செயலகத்தால் சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாகவும் இடம்பெயர்ந்து வரும் மக்கள் தமது பகுதி கிராம அலுவலகங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சமூக நலன்சேவை அமைச்சால் போசாக்கு ஊட்டும் கருத்திட்டம்!

மன்னார்—

மன்னார் மாவட்டத்தில் சமூக நலன் சேவை அமைச்சின் மூலம் போசாக்கு ஊட்டும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யுத்தத்தாலும், இடம்பெயர்வாலும் பாதிப்படைந்த பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்கே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான புள்ளிவிபரம் திரட்டல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் தொடர்ச்சியாக 9 மாதங்களுக்கு இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 15 கிலோ உலர் உணவுப் பொருட்கள் மாதாந்தம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201)

## "ஒமர் முக்தர்" திரைப்படம் திரையிடல்

முல்லைத்தீவு—

முள்ளியவளை தமிழீழ நுண்கலைக் கல்லூரியினரால் "நல்ல சினிமா" ஒரு தேடல் "ஒமர் முக்தர்" திரைப்படம் திரையிடல், விளக்கவுரை போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

## வீரவேங்கை அருச்சுனாவின் 20 ஆம் ஆண்டு நிறைவு தினம்

கிளிநொச்சி —

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஒளிக்கலைத்துறையின் முதல் மாவீரன் வீரவேங்கை அருச்சுனாவின் 20 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு கடந்த புதன்கிழமை கப்டன் பிரசன்னா ஒளிக்கலை கல்லூரியில் நடைபெற்றது.

ஒளிக்கலைப்பிரிவில் போராளி அன்புவாகை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் - பொதுச்சுடரை ஈழநிலா படைப்பகத்தின் பொறுப்பாளர் நகுலன் ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரை மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றி வைத்தார். திருவுருவப்படத்துக்கான மலர்மாலையை மாலதி படையணிப் போராளி விடுதலை அணிவித்தார்.

நினைவுரையை புலிகளின் குரல் பொறுப்பாளர் நா. தமிழன்பன் நிகழ்த்தினார். ஒளிக்கலைப்பிரிவு நடத்திய மழலை ஒளிப்படப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி வழங்கினார்.

அருச்சுனா இணைத்தளத்தின் ஆங்கிலப் பகுதியை நா.தமிழன்பன் தொடக்கிவைத்தார். (கு)

## வீடமைப்பு பணிகள் ஆரம்பம்!

முல்லைத்தீவு —

முல்லைத்தீவு மாவட்டத்தின் நேர்ப் திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் துரிதகதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கு வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 59 கிராமங்களில் வீடமைப்புப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (கு)

## கறுப்புபட்டி அணிந்து மேதின பேரணி!

கிளிநொச்சி—

தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை அரசின் அட்டூழிய வன்முறைகளைக் கண்டிக்கும் வகையில் கிளிநொச்சியில் கறுப்புப்பட்டி அணிந்து மேதின பேரணி நடத்தப்படவுள்ளது.

மே தின பேரணியானது காலை 9 மணிக்கு கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து நிறுவனங்களின் பணியாளர்கள், மக்கள் பங்கேற்க வேண்டும் என கிளிநொச்சி கூட்டுறவு அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளன.

## சின்னஞ்சிறு செய்திகள்

### யானைகள் அட்டகாசம்

கிளிநொச்சி—

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேசத்துக்குட்பட்ட கல்மடு கிராமத்தில் காட்டுயானைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

அண்மை நாட்களாக மக்கள் குடியிருப்புகளுள் புகும் யானைகள் பயன்தரு மரங்கள் பலவற்றை அழித்து வருகின்றன. (கு)

### சிறுவர் கொலை; கண்டித்து ஆர்ப்பாட்டப் பேரணி!

கிளிநொச்சி—

கிளிநொச்சியில் யுனிசெப் அலுவலகம் முன்பாக - சிறுவர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கிளிநொச்சியில் உள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் ஈடுபட்டனர். திருகோணமலையில் அப்பாவிச் சிறுவர்கள் சிங்களப் படையினரால் கொல்லப்படும் போது யுனிசெப் ஏன் மௌனமாக இருக்கிறது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

### வருடாந்த திருவிழா

வட்டக்கச்சி—

வட்டக்கச்சி சூசையப்பர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நாளை நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழாவானது கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தினமும் ஆலயத்தில் பிற்பகல் திருப்பலிப் பூசைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (09)

### இரவுநேர பஸ்சேவை இடைநிறுத்தம்

மன்னார்—

நீண்டகாலமாக இயங்கிவந்த இரவுநேர கொழும்பு - மன்னார் பஸ் சேவை தற்சமயம் நிறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகளைக் கருத்தில் கொண்டு சேவைகள் யாவும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் பகல்நேர கொழும்பு - மன்னார் பஸ்சேவையில் பயணிகள் தொகை அதிகரித்துள்ளது. (201)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.
- திருக்குறள்.

## நமது நோக்கு

# வேண்டுகோள் மட்டும் போதுமா?

ஒஸ்லோவில் நேற்று முன்தினம் அவசரமாகக்கூடிய இணைத்தலைமை நாடுகள் - அனைத்து படுகொலைகளையும் நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன.

அதுமட்டுமன்றி இலங்கை அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கு என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

ஆனால், எதிர்பார்க்கப்பட்டதுபோல இந்த மாநாட்டில் குறிப்பிடத்தக்க முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. வழக்கம்போலவே வன்முறைகளுக்குக் கண்டனம், கொலைகளை நிறுத்துமாறு வேண்டுகோள் இவற்றுடன் முடிந்துபோய்விட்டது.

அதேவேளை, இலங்கை நிலைமை குறித்து ஆராயவும் - என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வது என்ற முடிவுகளை எடுக்கவும் இணைத்தலைமை நாடுகள் ரோக்கியோவில் கூடவிருக்கின்றன.

இணைத்தலைமை நாடுகளைப் பொறுத்தவரை இலங்கை விவகாரத்தில் தமது பிடியை இழந்துவருவதாகவே கருதப்படுகிறது. ரோக்கியோ மாநாட்டின்போது இந்த நாடுகளுக்கு இருந்த 'கருத்துப்பலம்' இப்போது இருப்பதாகத் தெரியவில்லை.

இதற்குப் பிரதான காரணம் இணைத்தலைமை நாடுகள் இதுவரை காலமும் இலங்கை அரசாங்கத்தின் சமாதான விரோத போக்கையும், நடவடிக்கைகளையும் கண்டிக்கத் தவறிவிட்டமையே.

45 பில்லியன் டொலர் நிதியுதவியைக் காட்டி இரண்டு தரப்பையும் வழிக்குக் கொண்டுவந்துவிட எண்ணிய இந்த நாடுகள், தமிழ்மக்களின் தரப்பில் பெரிதாக எந்த அக்கறையையும் செலுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக - கண்டியில் நடந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளுக்குப் பிரதிநித்துவம் கொடுக்கத் தவறியதும் இணைத்தலைமை நாடுகளின் அசமந்தப்போக்கையே வெளிக்காட்டியது.

சமாதான முயற்சிகளை இருதரப்பும் ஆக்கபூர்வமாக முன்னெடுத்தால், 45 பில்லியன் டொலர் நிதியுதவி தருவதாகக் கூறிவிட்டு - பின்னர் அதில் ஒரு தரப்பை கழற்றிவிட்டபோது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து போயினர்.

பின்னர், இலங்கை அரசுக்கு இணைத்தலைமை நாடுகள் தொடர்ந்தும் நிதியுதவிகளை வழங்கிக் கொண்டே இருப்பதும் குறிப்பிடத்தக்கது. சமாதானத்தை முன்னிறுத்தி 45 பில்லியன் டொலர் பேரம் பேசிவிட்டு - அதை முன்னெடுக்காமலேயே இலங்கை அரசுக்கு இந்த நாடுகள் உதவியைச் செய்தன.

அந்தக் கட்டத்திலேயே இலங்கை அரசு இணைத்தலைமை நாடுகளின் கருத்தை அலட்சியம் செய்யும் நிலைக்கு வந்துவிட்டது. ஒரு புறத்தில் தமிழர் தரப்பின் அதிருப்தியையும், மறுபுறத்தில் அரச தரப்பின் அலட்சியப் போக்கையும் சம்பாதித்துக்கொண்ட இணைத்தலைமை நாடுகள் - காலப்போக்கில் இலங்கையில் அதிகரித்த வன்முறைகள் குறித்து வெறும் கண்டனத்தோடு நிறுத்திவிட்டன.

இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது தொடுத்த எத்தனையோ தாக்குதல்கள், படுகொலைகள், இராணுவக் கெடுபிடிகள் எல்லாவற்றையும் இணைத்தலைமை நாடுகள் மட்டுமன்றி சர்வதேசமும் அக்கறையுடன் பார்க்கவேயில்லை.

இதன் விளைவாக தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்தின் மீதான நம்பிக்கையை இழந்து போயிருக்கின்றனர். மறுபுறத்தில் சிங்கள அரசு இணைத்தலைமை நாடுகள் என்னதான் செய்துவிடமுடியும் என்ற இறுமாப்பில் உள்ளது.

இப்படிப்பட்ட சூழலில் இணைத்தலைமை நாடுகளின் வேண்டுகோளையோ, அழுத்தங்களையோ கருத்தில் எடுக்கப்பட வாய்ப்பில்லை என்றே தெரிகிறது.

அரச பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இணைத்தலைமை நாடுகள் உரிய அழுத்தங்களைப் பிரயோகித்தால், அதுவே இலங்கைத்தீவில் வன்முறைகளும், கொலைகளும் ஓய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும்.


மாறாக இலங்கை அரசின் போக்கைக் கட்டுப்படுத்தவோ, நேரடியாகக் கண்டிக்கவோ விரும்பாமல், பொதுப்படையாக வன்முறைகளை நிறுத்துங்கள் என்று வேண்டுகோள் விடுப்பது எந்த வகையிலும் சமாதானத்துக்கு உதவமாட்டாது.

இணைத்தலைமை நாடுகள் இலங்கையில் சமாதானம் ஏற்படவிரும்பினால் முதலில் தமிழ்மக்கள் மீதான அரச பயங்கரவாதத்தை நிறுத்த அழுத்தம் கொடுக்கவேண்டும்.

அரச பயங்கரவாதத்துக்கு முடிவுகட்டப்பட்டால் சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமான முறையில் முன்னெடுக்கப்பட வாய்ப்புக்கள் பிறக்கக்கூடுமல்லவா?

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# அரசாங்கம் யுத்தத்துக்குச் சென்றாலே அமைச்சுப் பொறுப்பை ஜே.வி.பி ஏற்கும்

## இப்படிக்கூறுகிறது சிங்களப்பத்திரிகை!

கொழும்பு—

அரசாங்கம், விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தத்துக்கு சென்றால் மாத்திரமே அமைச்சுப் பதவிகளை ஏற்று அரசுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்கு ஜே.வி.பி தீர்மானித்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விடுதலைப் புலிகள், படையினர்மீது தொடர்ந்து தாக்குதல் மேற்கொள்ளும் நிலையில், போர்நிறுத்தத்தைப் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமாக இருந்தால், அரசுக்கான தமது ஆதரவை வழங்காமல் இருக்கவும் ஜே.வி.பி தீர்மானித்துள்ளது.

இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாமீது, நடத்திய பின்னர் அரசு யுத்தத்துக்குச் செல்லுமென்றும் - எனவே, அமைச்சுப்பதவிகளை ஏற்று அரசுக்கான ஆதரவை வழங்கலாமென விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார்.

ஆனால், இது தொடர்பாக அரசு மீது நம்பிக்கைகொள்ள முடியாதெனவும், சிறிதுகாலம் பார்த்திருந்து தீர்மானம் எடுக்கவேண்டுமெனவும் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் அனுரகுமார திஸநாயக்க ஆகியோர் தெரிவித்தனர்.

இதனால் ஜே.வி.பிக்குள் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறதென அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# தேசிய அரசொன்றை அமைக்க ஜனாதிபதியிடம் ஆலோசனை!

கொழும்பு—

தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையை அடுத்து தேசிய அரசொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. இவர்களது இந்த ஆலோசனை தொடர்பாக திறந்த முறையில் பேச்சுநடத்துவதற்குத் தயாரென ஜனாதிபதி இந்தக் குழுவினருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக நாட்டில் தற்போது நிலவும் நிலைமையின்கீழ் வெளிநாட்டு சக்திகளின் செயற்பாடுகளை விலக்குவதற்கு ஒன்றுபட்டுச் செயற்பட தயாராகவுள்ளதாகவும் இந்தக் குழுவினர் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர். இது தொடர்பாக ஜனாதிபதியுடன் விசேட பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் இந்தக் குழுவினர் ஆலோசித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

## பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு

# மேதின ஊர்வலம், கூட்டங்களை நடத்தவேண்டாமென அறிவிப்பு!

கொழும்பு—

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு மேதின ஊர்வலங்கள், கூட்டங்களை நாளை நடத்தவேண்டாமென, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் நிலவும் பாதுகாப்பு காரணங்களால் மேதின ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்களுக்காக மக்களை கொழும்பு நகருக்குள் கொண்டுவருவது பொருத்தமானதாக அமையாதெனவும், எனவே மேதின ஞாபகார்த்த நிகழ்வை நடத்துமாறும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மேதின ஊர்வலங்களை நிறுத்தி ஞாபகார்த்த கூட்டங்களை மட்டும் நடத்துவதற்கு அரசியற் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் தீர்மானித்துள்ளன.

இதன்படி பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு காலி நகரிலும், ஐ.தே. கட்சியின் கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு கண்டியிலும் நடத்தப்படவுள்ளது.

இதனிடையே மேதின ஊர்வலங்கள், கூட்டங்களை தாம் இரத்துச் செய்வதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார். (தே)

# அரசுக்கு ஆதரவு வழங்குமாறு ஐ.தே. கட்சிக்கு ரணில் தெரிவிப்பு

கொழும்பு—

சமாதான முயற்சியை முன்னெடுத்து நீக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான ஆதரவை எதிர்காலத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கு வழங்குமாறு ஐ.தே. கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க- கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலுள்ள ரணில் இலங்கைக்குத் திரும்பும்வரை இவ்வாறு செயற்படுமாறு ஐ.தே. கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய உட்பட ஏனைய சிரேஷ்ட தலைவர்களுக்கு மேற்கண்டவாறு அறிவித்துள்ளார். (தே)

# தொழிற்பயிற்சி நிறுவனங்களை இணைக்க முயற்சி

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்டத்தில் தொழிற்பயிற்சிகளை நடத்திவரும் அனைத்து நிறுவனங்களையும் இணைத்து தகவல் பரிமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு, யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அதன் தலைவர் சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

யாழ்.மாவட்டத்தில் இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சி நிலையங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச திணைக்களங்கள் மற்றும் தனியார் துறையினர் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் இவ்வாறு நடத்தப்பட்டுவரும் தொழிற்பயிற்சி நிலையங்கள் தரமான பயிற்சிகளையே வழங்க வேண்டும். சான்றிதழ்களை மட்டுமே பெறுவதற்காக நடத்தப்படும் தொழிற்பயிற்சிகளால் எவருக்கும், எந்தவித பிரயோசனமும் இல்லை என்பது அனுபவ ரீதியாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த வகையில் தொழிற்பயிற்சிகளை நடத்திவரும் நிறுவனங்களுக்கான ஒருங்கிணைப்புக்குழு ஒன்றும் இணையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மீண்டும் ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் ஜெயலலிதா!

**இப்பொழுது நடைபெறப்போவது என்ன? என்ற தலைப்பில் 20/04/2006 'லங்கா தீப' நாளிதழில் உபுல் ஜோசப் பெர்ணான்டோ எழுதிய கட்டுரையின் தமிழ் வடிவம்;**

எம்.ஜி.ஆர் இலங்கைத் தமிழருக்காக குரல் கொடுத்தது 1983 ஆம் ஆண்டில். எம்.ஜி.ஆரின் குரலுக்கு இந்தியா இலங்கைக்கு வந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் எழுதிய பின்னர் தமிழ் நாட்டின் முதலமைச்சர் தனது குரலை நிறுத்திக் கொண்டார். 1990 ஆம் ஆண்டு பிரேமதாஸ தலைமையிலான அரசாங்கம் வடக்கு - கிழக்கில் நடவடிக்கை மேற்கொண்டபோது, வடக்கு - கிழக்கில் வசித்த மக்களுக்கு அவர்கள் வாழ்ந்த இடங்கள் இல்லாமற் போனபோது தமிழ் நாட்டு முதலமைச்சர்கள் எந்தவித குரலையும் எழுப்பவில்லை.

1993 ஆம் ஆண்டு ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தலைமையிலான அரசு கிழக்கை இலக்காகக் கொண்டு நடவடிக்கையை மேற்கொண்ட போதும் தமிழர்கள் அகதிகளாகினர். ஆனால், தமிழக முதல்வர்கள் குரல் எழுப்பவில்லை.

1995 ஆம் ஆண்டு சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் கால்பதித்த போது யாழ்ப்பாணத்தில் இருந்த தமிழர்கள் - இருந்த இடங்களைவிட்டு வெறுங்கையுடன் ஓடிய போதும் தமிழக முதல்வர்கள் குரல் எழுப்பவில்லை.

உண்மையாக திருகோணமலையில் ஏற்பட்ட நிலைமையால் தமிழர்கள் அனாதைகளாகி விட்டனர் எனவும், அவர்களது கௌரவத்துக்கு தீங்கு நேர்ந்து விட்டதாகவும் கூறி தற்போதைய முதலமைச்சர் ஜெயலலிதா கூக்குரல் இடுவதற்கு ஆரம்பித்துள்ளார். இவ்வாறு கூக்குரல் இடுவது சும்மா அல்ல. தமிழக தேர்தல் அண்மித்து விட்டமையாலேயே அவர் இவ்வாறு கூக்குரல் இடுகின்றார். தமிழக வாக்குகளை எதிர்பார்த்து தமிழ் மக்களின் சார்பாக குரலெழுப்பச் சென்று தமிழ் நாடு மட்டுமல்ல இந்தியாவும் நல்ல பாடம் படித்துக் கொண்டது. அது தமிழகத்தில் நிகழ்ந்த ராஜீவ்காந்தி கொலையாகும். அந்தப் பாடத்தைக் கற்றுக் கொண்டு தற்பொழுது பல வருடங்களாகின்றன.

இதன் பின்னர் தமிழ் நாடும், இந்தியாவும் இலங்கைத் தமிழர்களுக்காக குரலெழுப்ப வராதது தமக்குத் தீங்கு நேருமென்ற அச்சத்தாலாகும். வேலுப்பிள்ளை - பிரபாகரன் கடந்த பத்தாண்டுக்கு மேலாக கஷ்டப்பட்டது தமிழகத்தினதும், இந்தியாவினதும் அச்சத்தை அகற்றுவதற்கேகும். அதற்குச் சிங்களவர் தொடர்பான கொள்கைகளையே பிரபாகரன் பயன்படுத்தினார். சிங்களவரின் எண்ணம் குறுகியது.

இது சிங்களவர் தொடர்பாக அவரது கொள்கை. இன்று இந்தியாவில் ராஜீவின் மனைவி சோனியா காந்தியின் அரசாங்கமே உள்ளது. இன்று அவரது ஆட்சி இருப்பது தமிழ் நாட்டில் பிரபாகரனை ஆதரித்த கட்சிகளின் வாக்குகளின் புண்ணியத்தால். 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னர் பிரபாகரனின் பிரதிநிதிகள் இரகசியமாகச் சோனியாவைச் சந்தித்ததாகக் குற்றம் சாட்டியது தமிழகத்தின் தற்போதைய முதலமைச்சர் ஜெயலலிதாவே. கணவரைக் கொன்றவர்களுடன் சோனியா கொடுக்கல் வாங்கல் வைத்துள்ளதாக அன்று முழு இந்தியாவுக்குமே கேட்கக் கூடியதாகச் சத்தமிட்டார். சோனியா புலிகளை மன்னித்தாலும், தான் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப் போவதில்லையெனத் தெரிவித்தார்.

அது மட்டுமன்றி சிறிது காலத்துக்குள்ளேயே புலிகள் தன்னை கொல்ல வருவதாக மரணக் கூச்சலிட்டார். தமிழ் நாட்டுப் பொலிஸைக் கொண்டு புலிகளை விரட்டி விரட்டி அடித்தார்.

அந்த ஜெயலலிதாவின் மடியில் இன்று இருப்பது புலிகள். அவர் கடந்த நாட்களில் பிரபாகரன் தயார் செய்த தமிழ் நாட்டின் கட்சியோடு கூட்டணியை ஏற்படுத்தினார். அது தமிழகத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அவருக்கு அவர்களது உதவி அவசியமென்பதால். இன்று ஜெயலலிதா இலங்கைத் தமிழருக்காகக் குரல் எழுப்புவது - இவ்வாறு கூட்டணி அமைத்ததனால் ஆகும். தான் அமைத்த கட்சியுடன் கூட்டணி ஏற்படுத்திய ஜெயலலிதாவுக்கு இலங்கைத் தமிழர்கள் தொடர்பாகச் சத்தமிட முடியாதென்பது பிரபாகரனுக்குத் தெரியும்.

ஜெயலலிதாவின் உதடுகளைச் சத்தமிட வைக்க வேண்டுமெனில் இலங்கையில் சிங்களவர்கள் - தமிழர்களுக்கு அடிக்க வேண்டும். குறைந்தது இராணுவத்தினராலாவது தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட வேண்டும். இவற்றைச் செய்விப்பதற்கு எடுக்க வேண்டிய விதம் பற்றி பிரபாகரன் யோசித்தது 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர்.

ரணில் ஜனாதிபதியானால் சமாதானத்தை வழங்கி விடுவார் என்பதால் ரணில் தலைமையிலான அரசாங்கத்தில்தமிழ்மக்கள் பிரச்சினைகளை எதிர் கொள்ள மாட்டார்கள் என்பதை பிரபாகரன் தெரிந்து கொண்டிருந்தார். மகிந்த குறித்து தவறான விதமாகவே பிரபாகரன் நினைத்தார். மகிந்த - ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமயவுடன் ஒப்பமிட்ட பக்கம் பார்த்து மகிந்தவை பிரபாகரன் பகுப்பாய்வு செய்தது சிங்கள மக்களாலோ, இராணுவத்தாலோ நாட்டிலுள்ள தமிழ் மக்களைச் சங்காரம் செய்ய பின்னணியை தயார் செய்யும் ஒரு தலைவராக அப்படி பகுப்பாய்வு செய்த பிரபாகரன் ரணிலைத் தோற்கடித்து மகிந்தவைக் கொண்டு வந்தார்.

மகிந்த பதவிக்கு வந்து இரண்டு மாதங்கள் செல்ல முன்னர் இராணுவத்தை இலக்கு வைத்து கிளைமோர் தாக்குதல்கள் ஆரம்பித்தது.

ஆனால், வடக்கு - கிழக்கில் இராணுவச் சோதனை நடவடிக்கைகளால் அந்தப் பகுதிகளில் வசிக்கும் தமிழர்கள் பாதுகாப்புத் தேடி தமிழகம் சென்றனர். இதற்கு தமிழகத்திலுள்ள ஜெயலலிதாவின் தொலைக்காட்சி சேவை மிகப் பெரிய பிரசாரத்தை வழங்கியது. இதனால் தமிழ் நாட்டில் அமைதி குலைந்தது. தமிழ் நாட்டின் அமைதியற்ற நிலை குறித்து இந்திய அரசாங்கம் மகிந்தவுக்குத் தெரிவித்த பின்னர் சோதனை நடவடிக்கைகள் நின்று சமாதானப் பேச்சு ஆரம்பமானது.

சமாதானப் பேச்சுக்கு பிரபாகரன் வந்தது, கருணாவை நிராயுதபாணி ஆக்குவதாக அரசிடமிருந்தும் சர்வதேச சமூகத்திடமிருந்தும் வாக்குறுதியை எடுத்துக் கொண்டே. பேச்சு முடிவடைந்து சில நாட்கள் செல்வதற்கிடையிலேயே வாக்குறுதி முறிந்து போனது. கருணா குழுவின் கொலைகள் நாளுக்கு நாள் அதிகரித்தன. திருகோணமலையில் புலிகளின் தலைவர் கொல்லப்பட்டார். கிளைமோர் குண்டுகள் வெடித்ததுடன் தமிழகத்தில் ஜெயலலிதாவுக்கு குரலெழுப்பக்கூடிய விதமாக ரன் ஒன்றை எடுப்பது பிரபாகரனுக்குத் தேவையாக இருந்தது. அவர் அதற்குத் தேர்ந்தெடுத்தது சாம்பலின் கீழ் நெருப்பு வெடிக்கும் திருகோணமலையை. திருகோணமலையை தீக்குச்சியாலும் பற்ற வைக்க முடியுமென்பதை அவர் தெரிந்து வைத்திருந்தார். அவர் நினைத்தவாறே வேலைகள் நிகழ்ந்தன. திருகோணமலை அமைதி இழந்து அங்கு தமிழர்களில் ஒரு பகுதியினர் அகதிகளாகினர்.

இப்பொழுது ஜெயலலிதா மிகவும் பலமாகக் குரலெழுப்புவது அந்த அகதி தமிழ் மக்களுக்காகவே. ஜெயலலிதாவின் குரலுக்கு கலக்கமடைந்திருப்பது இந்திய அரசாங்கமே. ஜெயலலிதா குரலெழுப்பும் போது இந்திய அரசு கலக்கமடையும் என்பது பிரபாகரனுக்குத் தெரியும். 1983 ஆம் ஆண்டிலும் அதுதான் நடந்தது. அன்று எம்.ஜி.ஆர் குரலெழுப்பும் போது இந்திய அரசாங்கம் கலக்கமடைந்து பிரபாகரனை மடியில் வைத்துக் கொண்டது. இந்தத் தடவையும் அவ்வாறு நிகழுமா? எப்படியாவது இந்தியாவின் மடியில் பாய்வது பிரபாகரனுக்குத் தேவையாக உள்ளது.

இந்தியப் படைகளுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்து இந்தியாவின் மடியிலிருந்து விழுந்து விட்ட பிறகு, ஐரோப்பாவின் பக்கம் திரும்பினார். மேற்கு நாடுகளின் பக்கம் திரும்பினார். கனடா அவற்றில் முக்கியமானது. பிரபாகரன் இந்தியாவுக்குத் தமிழ் அகதிகளை அனுப்பி செய்த வேலையையே கனடா உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கும் தமிழ் அகதிகளை அனுப்புவதற்கும் பரீட்சித்துப் பார்த்தார். இந்த வேலை கனடாவில் நினைத்த அளவுக்கு சரிவரவில்லை.

உலகில் அதிக இலங்கைத் தமிழர்கள் அடைக்கலம் புகுந்துள்ளது கனடாவில். கனடாவில் சில மாநிலங்களில் அரசாங்கத்தை அமைப்பதும், வீழ்த்துவதும் என்ற நிலையில் தமிழர்கள் அங்கு உள்ளனர். அவர்களது அதிகாரம் ரொறன்ரோ நகரிலேயே அதிக சக்திமிக்கதாக உள்ளது. ரொறன்றோ பிரபாகரனின் தமிழ்நாடு என ஆவதற்கு அதிக காலம் செல்லவில்லை.

இந்தியா இந்த திசைப் பக்கம் குரோதத்துடனேயே பார்த்திருந்தது. புலிகள் இந்தியாவுக்கெதிராக யுத்தப் பிரகடனம் செய்தபோது, அந்த ஆதரவு குரோதமாகத் திரும்பியது. ஆனால், இந்தியப் படைகள் பிரபாகரனைப் பிடிப்பதற்கு வடக்கு - கிழக்கில் நடவடிக்கைளை மேற்கொண்டபோது, பிரபாகரனின் உயிருக்குத் தீங்கு நேராமல் பொறுப்புடன் பார்த்துக் கொள்ளுமாறு இந்தியா பார்த்துக்கொண்டது.

இந்தியாவுக்கு ஆத்திரம் வந்தது. ஆனால், இந்தியா தாங்கள் உருவாக்கி வளர்த்த இந்த மனிதரின் பக்கம் குரோதத்துடன் பார்த்துக் கொண்டு மட்டுமே இருக்க முடிந்தது. இந்தியாவுக்குத் தேவையாக இருந்தது அவரது சண்டைக்கு ஆதரவு வழங்கும் உலகம் அவரை ஓரம் கட்ட வேண்டுமென்பது. அப்பொழுது மண்டியிட்டு பிரபாகரன் தனது பக்கம் வருவது பற்றி தங்கள் ஆதரவை கோருவாரென்று இந்தியா நினைத்தது.

இப்போது புலிகளின் தலைவர் பிரபாகரன் பார்ப்பது - இந்தியாவின் மடியில் இலங்கை அரசை வீழ்த்துவதே. மகிந்தவின் பாகிஸ்தான் பயணமும், பாகிஸ்தான் ஆதரவும், மகிந்தவிடம் ஹக்கீம் சென்றமை, கிழக்கில் ஜிகாத் அமைப்புப் பற்றிய அறிக்கையும், பிரபாகரனுக்கு அதைச் செய்விப்பதற்கு நல்லதொரு ஆயுதமாகும். மகிந்தவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையில் ஆயுதக் கொடுக்கல் வாங்கல் பற்றி இந்தியா கலக்கமடையும் என்பதில் சந்தேகமில்லை. இதற்கு முன்னர் ரவூப் ஹக்கீம் இந்தியாவின் ஆசீர்வாதத்துடனும், அனுமதியுடனும் வேலை செய்தார்.

ஆனால், ரவூப் ஹக்கீம் மகிந்தவுக்கு கிட்டச் சென்றது. பாகிஸ்தானின் அனுமதியுடன். பாகிஸ்தான் எப்பொழுதும் இலங்கை அரசியல் விளையாட்டுக்களில் தனது மூக்கை நீட்டவில்லை. அந்த வேலையின் உரிமையை எழுதிக் கொண்டிருப்பது இந்தியாவே. இந்தியாவும் மூக்கை நுழைத்தது, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அல்லது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை வைத்துக் கொண்டே. இப்பொழுது இந்தியா விளையாட்டுக்காக (Game) பாவித்த முஸ்லிம் காங்கிரசை பாகிஸ்தான் பயன்படுத்துவதை இந்தியாவால் பொறுக்க முடியவில்லை. அடுத்தது - கிழக்கில் ஜிகாத் பிரச்சினை. இலங்கை முஸ்லிம்கள் ஆயுதபாணிகளாவது இந்தியாவுக்குப் பிடிக்கவில்லை.

மற்றையது - அவர்கள் இந்தியாவின் அனுமதியின்றி ஆயுதம் தூக்குவதை இந்தியா எந்த விதத்திலும் தாங்கிக் கொள்ள மாட்டாது. புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் - கிழக்கின் ஜிகாத் அமைப்புப் பற்றி கதைப்பது இவை அனைத்தையும் நன்றாக எடைபோட்டுப் பார்த்துத்தான். அவர்களுக்குத் தேவை ஜிகாத்துக்குப் பின்னால் பலமான சக்தி இருப்பதாகக் காண்பித்து ஜிகாத் - பிரபாகரனுக்கும், இந்தியாவுக்கும் ஆபத்தானதெனக் காட்டுவது. அவ்வாறு காண்பித்து ஜிகாத்தை பொது எதிரியாக்கிப் பிரபாகரனையும், இந்தியாவையும் ஒன்றாக ஒன்றுபடுத்துவதற்கே.

இலங்கை அரசாங்கம் இவற்றைத் தலையில் வைத்துக் கொண்டு வேலை செய்தால் நல்லது.

தமிழில் - நாடோடி




தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரைப் போல அவரது ஆசை நாயகி என கூறப்படுகின்ற தற்போதைய முதலமைச்சரான ஜெயலலிதாவும் இலங்கைத் தமிழருக்காகத் தற்போது குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளார்.





# தாக்குதல் நடந்தது எப்படி?

**இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா மீது இராணுவத் தலைமையகத்துக்குள் வைத்து நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மற்றும் அதையடுத்து மேற்கொள்ளப்பட்ட சம்பூர் பிரதேசம் மீதான இராணுவ நடவடிக்கை குறித்து டெய்லி மிரர் ஆங்கில நாளேட்டில் சுனில் ஜெயசிறி எழுதிய கட்டுரையின் தொகுப்பு**




இராணுவத் தலைமையக வைத்தியசாலையின் பின்புறம் கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் பெண் தற்கொலையாளி கர்ப்பிணியெனவும் அவர் கடந்த மூன்று மாதங்களாக இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆரம்ப கட்ட விசாரணைகளின் படி பெண் தற்கொலையாளி அனோஜா குகேந்திரராசா (வயது 21) எனவும் இவரது சொந்த இடம் பூவரசம்குளம், வவுனியா எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

தற்கொலையாளியான அனோஜாவும் மற்றும் இரண்டு பெண்களும் டாம் வீதியில் உள்ள விடுதியில் தங்கியிருந்துள்ளனர். சம்பவ தினமான செவ்வாய்க் கிழமை இராணுவத்தளபதி மீதான தாக்குதலை நடத்துவதற்கு இவர்கள் மூவரும் குறித்த இடத்திற்கு வந்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவ வைத்தியசாலையில் விசேட மகப்பேற்று சிகிச்சை நடைபெற்றது. இதில் இராணுவத் தினரின் மனைவிமாருக்கு இலவச சிகிச்சை அளிப்பது வழக்கம் குறித்த தற்கொலையாளியான அனோஜா வும் கடந்த 18ஆம் திகதி விசேட சிகிச்சைக்காக பதிவு செய்திருந்தார். இவர் நன்றாக சிங்களம் கதைக்கூடியவர். போலியான ஆவணங்கள் மற்றும் அடையாள அட்டைகளையும் வைத்திருந்தார்.

இந்த பெண் வைத்தியசாலை யின் வெளியேறும் நுழைவாயிலில் 30 நிமிடங்கள் பஸ்ஸுக்காக காத்திருப்பது போல் நின்றிருந்ததாக தெரிவிக்கப் படுகின்றது.

இராணுவத் தளபதி பொன்சேகா மதிய உணவுக்காக தனது வீட்டிற்கு ஒவ்வொரு நாளும் பிற்பகல் 1.30 மணிக்கு செல்வது வழக்கம். கடந்த செவ்வாய்க்கிழமை கூட்டுப்படை தலைமையகத்தில் வாராந்த கூட்டம் மாலை 2.30 மணிக்கு நடைபெறுவதாக இருந்தது. இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் தயா சந்தகிரி, விமானப் படை தளபதி டொனால்ட் பெரேரா, கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொட மற்றும் இராணுவத் தளபதியும் பங்கேற்க இருந்தனர்.

இராணுவத்தளபதியின் கார் வைத்தியசாலையின் வெளிச் செல்லும் பாதை ஊடாக வந்த வேளை அந்தக் காருக்கு முன்பாக நான்கு மோட்டார் சைக்கிள்களில் இராணுவத்தினர் பாதுகாப்பாக வந்தனர்.

இந்த வேளை குறித்த தற்கொலையாளி இடது பக்கத்தில் இருந்து இராணுவத் தளபதியின் காரைநோக்கி ஓடிவந்தார். இதனை அவதானித்த மோட்டார் சைக்கிளில் சென்ற இராணுவ வீரரான கோப்ரல் வை.எல்.ஏ.சீ. ஜக்கந்தவல என்பவர் முதலில் வழியைவிட்டு விலகுமாறு குறித்த பெண்ணுக்கு கூறினார். மீண்டும் அவர் குறித்த பெண்ணை நோக்கி காருக்கு அண்மையாக வரவேண்டாமென சத்தமிட்டார்.

எனினும் குறித்த பெண் காரை நோக்கி ஓடிவரவே அவர் அந்தப் பெண்ணை காலால் உதைத்தார். இதனையடுத்து அந்தப் பெண் நிலத்தில் விழுந்தார். உடனேயே அவர் குண்டை வெடிக்க வைத்தார்.

இதனால் இராணுவத் தளபதி யின் பாதுகாவலர்களில் ஐவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். இராணுவத்தளபதி உட்பட 27 பேர் காயமடைந்தனர். இராணுவத் தளபதி அடிவயிறு, நெஞ்சுப் பகுதியிலும் கடும் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார். இவருக்கு மூன்று மணித்தி யாலங்கள் நடத்தப்பட்ட மூன்று சத்திரசிகிச்சைகளின் பின்னர் நல மாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

மறுநாள் புதன்கிழமை இராணுவத் தளபதி ஆபத்தான கட்டத்தை கடந்துவிட்டதாக டொக்டர்கள் தெரிவித்தனர். இராணுவத்தளபதியின் நுரையீரல் குண்டு சிதறல்களால் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப் பட்டது. அன்றைய தினமே இராணுவத் தளபதி சில வார்த்தை களை பேசி னார் என வும் டொக் டர்கள் தெரி வித்தனர்.

தாக்கு தல் நடை பெற்ற நேரம் இராணுவத் தளபதி காரில் வலது பக்க பின் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். முன் ஆசனத்தில் சாரதி மற்றும் மேஜர் விக்கிரமசிங்க ஆகியோர் அமர்ந்திருந்தனர். இவர் கள் இருவரும் கடும் காயங்களுக்கு இலக்காகினர்.


இந்தத் தாக்குதலில் இடது



கோப்ரல் ஜக்கந்தவல

பக்கத்தில் சென்ற மோட்டார் சைக்கிள் இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அத்துடன் தற்கொலையாளியின் தலைப்பகுதி அலரி மரம் ஒன்றின் உச்சியில் இருந்தும், கால் வீதியிலும் கிடந்து கண்டுபிடிக்கப்பட்டது.

## முப்படையினரும் இணைந்து நடத்திய தாக்குதல்




இந்தத் தாக்குத லையடுத்து ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ, கந்தளாயில் இருந்த பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண் டோவிற்கு இந்த சம்பவம் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டார்.

இதனையடுத்து குற்றவியல் விசா ரணைத் திணைக் களம் மற்றும் 6 விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணை களில் இறங்கின.

இவர்கள் டசினுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரை இராணுவத் தலை மையகத்தில் வைத்து விசாரித்தனர். இதுவரை இராணு வத்தினர் மற்றும் பொதுமக்கள் என 200 பேர் வரை விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் நாலாவது சிங்க ரெஜிமென்டைச் சேர்ந்த சார்ஜன்ட் பிரியந்த, இரண்டாவது இராணுவ மருத்துவ படைப் பிரிவைச் சேர்ந்த கோப்ரல் வருச விதான, மூன்றாவது இராணுவ பொலிஸ் படைப் பிரிவைச் சேர்ந்த லான்ஸ்கோப்ரல் விராஜ், கெமுனு வோச் படைப் பிரிவைச் சேர்ந்த லான்ஸ்கோப்ரல் ஜெகத், முதலாவது சிங்க ரெஜிமென்டைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் சுனில் ராஜரட்ண, 7 ஆவது கெமுனுவோச் படைப்பிரிவைச் சேர்ந்த தேவசுரேந்திர, இராணுவ தளபாட படைப்பிரிவைச் சேர்ந்த டி.அத்தநாயக்க மற்றும் குருணா கலைச் சேர்ந்த நிருபா பிரியங்கனி என்ற பெண் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

கடும் காயங்களுக்குள்ளான முதலாவது இராணுவ பொலிஸ் படைப்பிரிவைச் சேர்ந்த ஜக்கந்தவல கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட உடனேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனைத்து ஆயுதப் படைகளின் தளபதிகளையும் இராணுவ தலைமையதிகாரி மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரையும் அலரி மாளிகைக்கு வருமாறு அழைத்தார். புதிதாக ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக அங்கு கலந்துரையாடப்பட்டது.

கூட்டத்தில் கடும் கோபத்துடன் காணப்பட்ட ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ விடுதலைப் புலிகளுக்கு எதி ராக கடுமையான பதிலடி நடவ டிக்கை ஒன்றை மேற்கொள்ளுமாறு பாதுகாப்புப் பிரிவு தலைவர்களுக்கு உத்தரவிட்டார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய உடனடியாக தாக்குதல் நடவடிக்கை திட்டமொன்று பாதுகாப்பு அதிகாரிகளால் வரையப்பட்டது. திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சம்பூர் பிரதேசம் மீதே இந்தத் தாக்குதலுக்கு திட்டமிடப்பட்டது.

சம்பூர், கட்டைபறிச்சான், இலக்கந்த ஆகிய இடங்கள் 2001 ஆம் ஆண்டுவரை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்தவை. இந்தப் பகுதிகளிலிருந்து படையினர் பின்வாங்கிய பின்னர் அந்தப் பகுதியைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த விடுதலைப் புலிகளால் திருகோணமலைத் துறைமுகம் முற்றுகைக்குட்படுத்தப்படும் ஆபத்து இருந்துவந்தது.

இதனைக் கருத்தில்கொண்டே சம்பூர் பிரதேசத்தின் மீது தாக்குதலை நடத்துவதற்கு பாதுகாப்பு அதிகாரிகள் திட்டமிட்டனர்.

முதல் கட்ட குண்டுத்தாக்கு தலுக்கு கிபிர் மற்றும் எப் 7 ரகங் களைச் சேர்ந்த விமானப்படையின் தாக்குதல் விமானங்கள் பயன்படுத் தப்பட்டதுடன் தொடர்ந்து கடற் படையும் இராணுவமும் தாக்கு தலைத் தொடர்ந்தன.

பிற்பகல் 5.50 மணியளவில் இரண்டு இஸ்ரேலிய தயாரிப்பு கிபிர் மற்றும் இரு சீனத் தயாரிப்பு எப் 7 குண்டுவீச்சு ஜெட் விமானங்கள் கட்டுநாயக்க விமானப்படைத் தளத்திலிருந்து புறப்பட்டு - 25 நிமிடங்களில் தாக்குதலைத் தொடங்கின. இவை சம்பூர் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட இடங்களில் இரண்டு பிரதான தாக்குதல்களை மேற்கொண்டன.

சம்பூர், கூனித்தீவு, இறால்குழி, இலக்கந்தை மற்றும் உப்பாறு ஆகிய பகுதிகள் மீதே குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தக் குண்டுத்தாக்குதலுக்குப் பின்னர் பிற்பகல் 6.35 மணியளவில் 4 இஸ்ரேலிய தயாரிப்பு றோடா பீரங்கிப் படகுகளும், 3 வோட்டர் ஜெட் படகுகளும் சம்பூர் கரையோரப் பகுதிகள் மீது ஷெல் தாக்குதலை மேற்கொள்ளத் தொடங்கின. கடற்படையின் இந்த ஷெல் தாக்குதல்கள் இரவு 9 மணிவரை நீடித்தது.

இதன்போது கடலிலிருந்து 80 இற்கும் அதிகமான ஷெல்கள் கடற்படையினரால் ஏவப்பட்டன. அதேசமயம் மங்கிபிறிட்ஜ் இராணுவ முகாமிலிருந்து 130 மில்லிமீற்றர் ஆட்லறிகள் மற்றும் பாகிஸ்தான் தயாரிப்பு பல்குழல் பீரங்கிகள் மூலம் சம்பூரில் தெரிவுசெய்யப்பட்ட இலக்குகள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஷெல் தாக்குதல்கள் இரவு 9 மணிவரை நீடித்தது. செவ்வாய்க்கிழமை இராணுவத் தினரால் 40 சுற்று பல்குழல் பீரங்கிக்குண்டுகளும் 130 மில்லிமீற்றர் ஆட்லறி ஷெல்கள் சுமார் 100 ம் ஏவப்பட்டன.

அன்று நள்ளிரவு இன்னொரு சுற்று வான் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அடுத்த நாள் காலை கடற்படையும் இராணுவமும் தொடர்ந்து அடையாளம் காணப்பட்ட இலக்குகள் மீது தாக்குதல் மேற்கொண்டன.

மீண்டும் அடுத்தநாள் புதன்கிழமை காலை 6.25 மணியளவில் நான்கு கிபிர் ஜெட் விமானங்கள் அதே பிரதேசம் மீது குண்டுத் தாக்குதலைத் தொடங்கின. இந்தத் தாக்குதல் நண்பகல் வரை நீடித்தது. இந்தத் தாக்குதலின் போது பாரிய சேதங்கள் விளைவிக்கப்பட்டன.

இந்த மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் புதன்கிழமை நண்பகலுக்குப் பின்னர் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் நிறுத்தப்பட்டது.

அன்று காலை அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எச்சரிக்கை ஒன்றை விடுத்தது.

புலிகளின் தாக்குதல்கள் தொடர்ந்தால் அவர்களின் தாக்குதல்கள் நிறுத்தப்படும் வரை குண்டுத்தாக்குதல்கள் மட்டுமன்றி தரைவழித் தாக்குதல்களும் தொடரும் என்று அரசாங்கத்தின் பாதுகாப்பு பேச்சாளர் அமைச்சர் கெகலிய ரம்புக்வெல செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

☆ ☆ ☆

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# காயமுற்ற இரண்டு படையினர் வைத்தியசாலையில் உயிரிழப்பு

கொழும்பு—

இருவேறு தாக்குதல் சம்பவங்களில் படுகாயமுற்று சிகிச்சை பெற்று வந்த இரு படையினர் மரணமானதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இராணுவத்தலைமையகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் படுகாயமுற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த முதலாவது பென்டகன் படைப்பிரிவைச் சேர்ந்த குணதிலக நேற்று முன்தினம் மரணமானார்.

இவருடன் சேர்த்து இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது.

அதேவேளை, வவுனியா-முற்றவெளியில் கடந்த 15 ஆம் திகதி நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் படுகாயமடைந்த 10 ஆவது கஜபா படைப்பிரிவைச் சேர்ந்த கோப்ரல் பிரசாத் கடந்த 27 ஆம் திகதி அநுராதபுரம் வைத்தியசாலையில் மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டுகிறது. எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை நிலவரம் குறித்து ஜஸ்வந்த் சிங் கவலை!

புதுடெல்கி—

இலங்கையில் நிலவும் சூழ்நிலை குறித்து முன்னாள் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங் கவலை வெளியிட்டுள்ளார். அத்துடன் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையே தற்காலிக போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து ஜஸ்வந்த் சிங் கூறியதாவது -

இலங்கையில் நீண்ட காலத்துக்கான அமைதியை ஏற்படுத்த புலிகள் உட்பட அனைத்து தரப்புகளும் பங்கேற்கும் பேச்சுவார்த்தைக்கு அரசு ஏற்பாடு செய்யும் என நம்புகிறேன்.

வட - கிழக்கு பகுதியில் சண்டை நீடிப்பது இந்தியாவுக்கும் நல்லதல்ல - இலங்கைக்கும் நல்லதல்ல. இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை துரதிஷ்டவசமானது.

இலங்கை வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர அடுத்த மாதம் இந்தியா வருகிறார். அவருடன் இந்தப் பிரச்சனை குறித்து விவாதிப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் தலைவர் பிரிவினைவாதியல்ல

## என்கிறார் மேல்மாகாண முதல்வர்

கொழும்பு—

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை பிரிவினைவாதியென நாம் கருதுவது தவறான விடயமாகும் என மேல் மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.

மகரகமவில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் இரு பிரதான கட்சிகளுமே பிரிவினை வாதத்தைக் கடைப்பிடிக்கின்றன.

நாம் பிளவுபட்டுள்ள நிலையிலேயே இருக்கின்றோம். பிரபாகரன் அதனை மேலும் விரிவுபடுத்தவே செய்கின்றார்.

நாட்டில் உள்ள இரு பிரதான கட்சியுமே மக்களைப் பிளவுபடுத்துவதையே நோக்கமாககொண்டு செயற்பட்டு வருகின்றன. அது மாற்றமடைய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# டுபாக்கோ கொம்பனியிடம் ரூபா 50 லட்சம் நட்டஈடு!

## கோருகிறார் கணவனை இழந்த பெண்

கொழும்பு—

சிகரெட் புகைத்ததால் புற்றுநோய் ஏற்பட்டு மரணமான ஒருவரின் மனைவி சிலோன் டுபாக்கோ கொம்பனியிடம் 50 இலட்சம் ரூபா நட்டஈடுகோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார். கம்பஹாவைச் சேர்ந்த பெண்ணே இந்த வழக்கை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்திருக்கிறார்.

தமது கணவர் சிறுவயதில் இருந்தே புகைப்பிடிப்பவர் என்றும், இதனால் அவருக்கு புற்றுநோய் ஏற்பட்டு மரணித்ததாகவும்.

கணவனின் மரணத்துக்குப் பிறகு உதவியின்றி நிர்க்கதியாகியுள்ளதுடன் டுபாக்கோ கொம்பனியிடம் 50 இலட்சம் ரூபா நட்டஈடு தருமாறும் இவர் கோரியுள்ளார்.

சிகரெட்டில் உள்ள நிக்கொட்டின் என்ற நச்சுப்பொருள் நுரையீரல், ஈரல் போன்ற பகுதியில் படிந்து புற்றுநோய் ஏற்படுவதாக வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# புலிகளைத் தடைசெய்யும்

வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையில் போர்நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே மற்றும் சுவீடன் ஆகிய நோட்டிக் நாடுகள் புலிகள்மீது ஐரோப்பிய யூனியன் தடையை விதிக்குமானால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் தமது பங்களிப்பைப் பாதிக்கும் எனக் கருதுகின்றன.

ஒஸ்ரியா, பெல்ஜியம், டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கிறீஸ், அயர்லாந்து, இத்தாலி, லக்ஸம்பேர்க், நெதர்லாந்து, போத்துக்கல், ஸ்பெயின், சுவீடன், பிரிட்டன், சைப்பிரஸ், செக் குடியரசு, எஸ்தோனியா, கங்கேரி, லத்வியா, லித்துவேனியா, மோல்ட்டா, போலந்து, ஸ்லோவாக்கியா, ஸ்லோவேனியா ஆகிய 25 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தால் புலிகள் மீது விதிக்கப்படக்கூடிய தடையின் மூலம் சமாதான முயற்சிகள் தொடர்பாக அவர்கள்மீது அழுத்தம் கொடுக்கக்கூடிய தகுதியை இழந்துவிடும் நிலை ஏற்படலாம் என்றும் சில நாடுகள் கருதுகின்றன.

இதனால் விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியம் இப்போதைக்கு தடை விதிக்கக்கூடிய சாத்தியம் இல்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளின் பயணத்துக்கு ஒருபே விமானப்படை ஹெலி வழங்கப்

## அமைச்சர் கெஹலிய ரம்பு

கொழும்பு—

புலிகளின் தளபதிகளின் பயணங்களுக்காக இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்களை எந்தக் காரணம் கொண்டும் வழங்கவேமாட்டோம் என்று கொள்கை திட்டமிடல் அமைச்சரும், அரசாங்கத்தின் பாதுகாப்பு விவகார பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இருப்பினும் புலிகளுக்கு பாதுகாப்பான பயண ஒழுங்குகளை செய்துகொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

புலிகளின் கோரிக்கைக்கு அமைய பாதுகாப்பான பயண ஒழுங்குகளை அரசாங்கம் செய்து கொடுக்கத் தயாராகவுள்ளது. பாதுகாப்பு மற்றும் வேறு சில காரணங்களை கருத்தில் கொண்டு விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்களை எந்தக் காரணம் கொண்டும் புலிகளின் பயணத்துக்கு வழங்கமாட்டோம்.

ஆனால், இதனைக் காரணம் காட்டி புலிகள் பேச்சுவார்த்தையை தவிர்த்துவிடக்கூடாது என்று கேட்கிறோம். ஏனெனில் புலிகளுக்கு பாதுகாப்பான பயண ஒழுங்குகளை செய்ய அரசாங்கம் தயாராக உள்ளது என அறிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் தற்போது சுமுக நிலைமை தோன்றியுள்ளது. புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வார்கள் என்ற அரசாங்கத்தின் நம்பிக்கையும் வலுவடைந்து வருகிறது.

இணைத்தலை... சமாதான பேச்சுவா... னைக் கலந்துகொள்... தங்களை கொடுப்ப... கின்றோம். அடுத்... பேச்சு வார்த்தை... இடம்பெறும் என்ப... தின் எதிர்பார்ப்பா... மேலும் தெரிவித்தா...

# ஈழத்து சோமு காலமானார்

கொழும்பு—

பிரபல எழுத்தாளர் ஈழத்து சோமு நேற்றுமுன்தினம் கொழும்பில் காலமானார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் அமைப்பாளரும், ஆறுமுக நாவலர் நூற்றாண்டு விழாக் குழு செயலாளருமான சோமகாந்தன் சுகவீனமுற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று முன்தினம் காலமானார். இவரது இறுதிக்கிரியைகள் நாளை கொழும்பில் நடைபெறவுள்ளன.

# இணைத்தலைமை நா மீது ஹெல உறுமய

கொழும்பு—

விடுதலைப் புலிகளுக்கு எதிரான அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்தும்படி இணைத்தலைமை நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்தமைக்கு ஜாதிக ஹெல உறுமய கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் கருத்து வெளியிடுகையில் -

இத்தகைய அழுத்தம் கொடுப்பதாக இருந்தால் விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல், மற்றும் அவர்களை பேச்சுவார்த்தை மேசையில் தொடர்ந்தும் வைத்திருத்தல் ஆகியவற்றின் முழுப்பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஜனநாயக ரீதியாகவும், சட்டரீதியாகவும் நியமிக்கப்பட்ட அரசாங்கம் என்ற வகையில் விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உரிய பதில... அரசாங்கத்துக்கு உ... பும் உள்ளது.

அந்த உரிமை... புக்கும் முறைய... அழுத்தங்களைக்... இணைத்தலைமை... கூடாது.

இராணுவத் த... கொலை செய்வத... பட்டிருக்கும் இந்... டின் தேசிய பாது... படுத்துவதற்காக ... யம் நடவடிக்கைக... வேண்டும்.

விடுதலைப் ... தாக்குதல்களை நி... சாங்கத்துக்கு இ... நாடுகளின் தலைவ... ளைக் கொடுப்பார... லைப் புலிகளால் ... கின்ற வன்முறைக... கட்டுப்படுத்த வேண்... மேலும் தெரிவித்தார்.

# மணலாற்றில்...

அருகில் இடம்பெற்றது.

உழவு இயந்திரத்தில் சென்ற போருதவிப் படைவீரர்மீதே கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# துணை...

ணிப்புக் குழுவுக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டு அவர்கள் சுயாதீனமாக செயற்படும் சூழ்நிலை ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் அல்ஸ்டன் குறிப்பிட்டார். (ஒ)

# கிளைமோரில்...

கிளிநொச்சியிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனளிக்காததால் இவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க....

மற்றும் உலகளாவிய ரீதியில் புலம்பெயர் தமிழ் மக்களின் நன்கொடைகள் மூலம் கிடைக்கிறது.

சுயமாக ஆயுதப்பயிற்சிகளை பெறும் விடுதலைப்புலிகள்- சர்வதேச சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களையும், படையினரிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களையும் பயன்படுத்துகின்றனர். பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கு விடுதலைப்புலிகள் முற்படுவதற்கான சான்றுகள் எதுவும் இல்லை.

விடுதலைப்புலிகளால் கண்டுபிடிக்கப்பட்ட வெடிகுண்டு அங்கிகள், வெடிபொருள் உள்ள [illegible] கள், [illegible]ப்பல் மீதான தாக்குதல்க[illegible]ன்ற [illegible]ந்திரோபாயங்களை [illegible] யங்கரவாத அமைப்புகள் [illegible] களவாடியுள்ளன.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விடுதலைப்புலிகளின் சினைப்பர் தாக்குதல் அணியினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக சந்தேகிக்கப்படுகின்றது. அதேவேளை, கருணா அணியினராலும், அரச உளவாளிகளாலும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 48 பேர் கொல்லப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# எல்லைக் கிராமங்களுக்கு மேலதிக ப

கொழும்பு—

எல்லைக் கிராமங்களின் பாதுகாப்புக்காக மேலதிக படையினரை அனுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ஏற்கனவே இந்தப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் படையினருக்கு மேலதிகமாக விசேட அதிரடிப் படையினரையும், இராணுவத்தினரையும் நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிரு...

அத்துடன், பொ... சாவடிகளின் எண்... அதிகரிக்கப்பட்டிருக்...

இதேவேளை, ... தைச் சேர்ந்த இ... தெரிவுசெய்து ஆயுத... ஊர்காவற் படையி... செய்யவும் அரசா... துள் ளது.

# அப்பட்டமான போர்நிறு

கொலைகள், துன்புறுத்தல்கள் சமாதானத்தை அச்சுறுத்துவதாகவே இருக்கின்றது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி இருதரப்பும் இராணுவரீதியான தாக்குதலில் ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடுபடுவார்களாயின் மோதல்கள் உருவாகி போர்நிறுத்த ஒப்பந்தத்தை மேலும் பலவீனமடையச் செய்யும்.

பொதுமக்கள் வசிக்கின்ற வயல்கள், வணக்கத்தலங்கள், பாடசாலைகள் என்பவற்றுக்கு அருகில் படைமுகாம்களை, போர்க் காவலரண்களையும் மற்றும் தமது அலுவலகங்களையும் இரு தரப்பினரும் அமைத்து வைத்திருப்பதை ... குற்றமாகும்.

கடந்த சில தின... விலான தாக்குத... குறைந்து காணப்ப... கிளைமோர் தாக்குத... வதாக களநிலவரம்,... என்பவற்றின் மூல... ளப்பட்ட அறிக்கை... படுகின்றது.

இதேவேளை, ... லைப் புலிகளும் ச... வார்த்தையில் தீ... மானால் - இடம்பெ... கள் உடனடியாக நிறு... மென மேலும் தெரிவ...

10 ஆம் ஆண்டு நின

பிறப்பு
16
04
1930



மனுவேற்பிள்ளை அருணா

பத்து ஆண்டுகள் ஓடிமறைந்தாலும்
எங்கள் மனங்களிலே நிறைந்திருக்கு
எங்கள் அன்புள்ள பப்பாவின்
இனிய நினைவுகளோடு வாழும்

சென் தோமஸ் வீதி,
மாதகல்.

அன்பு மனைவி,
மருமக்க

(2253)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு